உ

கடவுள் துணை
MADRA

# செந்தமிழ்

தொகுதி-௬] பிலவங்க ௵ மாசி ௴ [பகுதி-௪.

## யாப்பருங்கலக்காரிகை.

### ஒழிபியல்.

மாஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவில் விளங்கனிவந்
தாஞ்சீ ரடையா வகவ லகத்துமல் லாதவெல்லாந்
தாஞ்சீர் மயங்குந் தளையுமஃ தேவெள்ளைத் தன்மைகுன்றிப்
போஞ்சீர் கனிபுகிற் புல்லா தயற்றளை பூங்கொடியே.

இக்காரிகைக்கு முன்னர் வெளிப்பட்ட உரைகளெல்லாம் இயைபுடையனவாகக் காணப்படவில்லை. மாஞ்சீர் கலியுட்புகா என்பதற்குத் "தேமா, புளிமா என்னும் நேரீற்றியற் சீரிரண்டும் கலிப்பாவினுட் புகப்பெறா" என்பர். "கலிப்பாவில் விளங்கனி வந்தாஞ்சீரடையா" என்பதற்கு "கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரிரண்டும் கலிப்பாவினுட் புகப்பெறா" என்பர்.

இங்கே ஆசிரியர் கலி என்றும் கலிப்பா என்றும் வேறுபடுத்துக் கூறியதை நோக்காது இரண்டினையும் கலிப்பா என்று கொள்ளுதல் எங்ஙனம் பொருந்தும்? இரண்டுங் கலிப்பா என்பதே ஆசிரியர் கருத்தாயின்; சொற்கள் பல்காமல் ஒருங்கு சேர்த்துச் சுருங்கக் கூறுதொழிவாரா? தேமா, புளிமா என்னும் மாஞ்சீர்கள் கலிப்பாவிலே வாராவா? கலித்தொகையிலே வரும் கலிப்பாக்களுள்ளே பலவற்றிலே மாஞ்சீர் வருதலை ஆசிரியர் அறியாரா? ஆசிரியர் கலி என்றது கலித்தளையடியையேயாம். "கலித்தளையடிவயி னிலைக்குரித்த

*

ன்று" எனத் தொல்காப்பியரும் அதனை வற்புறுத்தும். கலி என்றதும் கலிப்பா என்றதும் ஒன்றினையே என்று கொண்டு "மாஞ்சீர் விளங்கனி பெய்தாகலியின்" எனத்திருத்திச் சூத்திரித்துப் பிரசாரணஞ் செய்தாருமுளர். அவரெல்லாம் ஆசிரியர் கருத்தினை நோக்கிலர்.

அல்லாத வெல்லாம் தாஞ்சீர் மயங்கும் என்பதற்கு "இவை யொழிந்த சீர்களெல்லாம் பாவினுள்ளும், பாவினத்தினுள்ளும் வந்து மயங்கப்பெறும்" என்பர். "இந்நான்குசீரு மொழிந்த சீரெல்லாம்" என்று பரிச்சேதஞ் செய்தாருமுளர்.

அல்லாத என்பது சீரினை விசேடித்ததாயின்; இடைப்பிறவரல் எப்பொருட்டாகும்? பாவினையும் இனத்தினையுங் குறித்துநின்ற கிளவிகள் யாவை? கலிமுதலியவற்றிலே மாஞ்சீர் முதலியன புகா எனவே மற்றையன புகுதலை இவரும் வேறு கூறுவாரா? இவ்வாறே ஆசங்கை நிகழ்தலானும் சீரோடியையாமையானும் அல்லாத என்றது இங்கே கூறப்படாத வஞ்சிப்பாவினையும், பாவினங்களையும் என்க.

தளையுமஃதே என்பதற்கு "எல்லாத்தளையும் எல்லாப்பாவினுள்ளும், எல்லாப்பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறும்" என்பர்.

இங்கே "அஃதே" என்பது "அல்லாத வெல்லாம் தாஞ்சீர் மயங்கும்" என்பதனைச்சுட்டிநின்ற அதிதேசமன்றோ! அல்லாத என்பது எல்லாப்பாவினையுங் குறிக்குமா? அல்லாத என்பது சுட்டிக் கூறுதனவற்றையே குறிக்கும். தளையிலே சுட்டிக் கூறப்பட்டது வெண்பாவேயாம். ஆதலின் அல்லாத என்பதற்கு வெண்பாவல்லாதன எனக்கோடலே நன்று.

(இன்னும் வரும்.)

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

# ஜீவஜந்துக்களைப்பற்றிய சில கற்பனைகள்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு—திருக்குறள்.

"தஞ்சாவூர் ஜில்லா நன்னிலந்தாலூகாவைச்சார்ந்த வொருசிறு கிராமத்தில் பார்ப்பான் ஒருவன் இருந்தான். தன்வயலில் முதிர்ந்திருக்கும் பயிர் அறுப்பதை மேற்பார்வை பார்ப்பான் வேண்டி வயற்கரையில் ஒருமரத்தின் நிழலில் வீற்றிருந்தான். அங்ஙனம் சிறிது நேரம் உட்கார்ந்திருப்ப, அவன்சமீபத்திலிருந்த ஒரு பெரும் பொந்தின்வழியாய்த் திடீரென்று கருந்தேட்கூட்டமொன்று வெளியேற, அதைக்கண்டு விடவிடத்து, நடுநடுங்கி, பிராமணன் ஓடியொதுங்கியிருந்து, சற்றுநேரஞ் சென்றதும், அவ்விடத்துக்குத் திரும்பி வந்து பார்த்தான். தேளொன்றுங் கண்ணுக்குப் புலப்படவில்லை; ஆனால் அவைவிட்டுச்சென்ற துவாரத்தைமட்டும் நோக்கினான். உடனே ஒரு பெரும் பாறையை எடுத்து, அப்புழையினின்றும் வேறு தேள் வெளிவராதிருக்கும்பொருட்டும், வெளிப்போன கூட்டம் மறுபடியும் உள்நுழையாதிருக்கும்பொருட்டும், அத்துவாரத்தை நன்கு மூடிவிட்டான். கதிரவன் மேல்கடல் மூழ்க மறையவும், வேட்டை நோக்கிச்சென்ற தேள்கூட்டம் தம்மகந்திரும்பின. பிராமணன் கண்டதிசயித்துத் தூரநின்று வேடிக்கை பார்ப்பானாயினன். தேள்கள் பலவொன்றாய்ச் சேர்ந்து, தம் வீட்டுத்தலைப்பில் வைத்திருக்குங் கல்லை அகற்றப்பெரிதும் முயன்றன. அவற்றின் முயற்சி பயன்படாதாயிற்று. எனினும், இக்கூட்டத்தைப்பாதுகாக்கும் போர்வீரத்தலைவன் போன்ற ஒரு பெருந்தேள் முன்வந்து, தன்தோழர்களை அப்புறம்விலக ஆணையிட, அவையும் ஒதுங்க, பின்பு தன் கொடுக்கை வேகமாகவளைத்து, மிகுந்த கோபத்துடன் கல்லின்மேல் தாக்க, அந்தோ! கல்லானது சிறுசிறு துண்டுகளாய் உடைந்துபோயிற்று. தேள்கூட்டமும் வீடுசேர்ந்தது."

வியப்புடன் பார்த்திருந்த பார்ப்பான் பேற்போந்த கதையை எமது சிநேகிதரொருவர்க்கு விவரித்துரைக்க அவரும் எம்மிடஞ் சொல்லிப்புன்னகைசெய்து "இக்கதை மெய்யோ பொய்யோ" என்று வினவினர். "புனாவிலிருந்து சிலமாதங்கட்குமுன் சென்னையில் வந்திருந்த மல்யுத்தம் வல்லாரில் ஒருவன் அம்மிக்கல் ஒன்றைத் தன் முன்னங்கைப்பலத்தால் இரண்டுதுண்டாய் உடைக்கக்கண்டு வியப்புற்றோம். ஆனால், தேளொன்று தனது கொடுக்கினால் கற்பாறையை யுடைக்கக்கண்டதில்லை; இனிமேற் காணப்போவது மில்லை" என்று யாமும் விடைபகர, அக்கதையைப்பற்றி யாம் கொண்ட அபிப்பிராயத்தைக் குறிப்பாய் அவருமறிந்து நகைத்தனர். ஜீவப்பிராணிகளைப் பற்றி இத்தகைய பொய்க்கதைகள் மிகுதியும் நம்முள் வழங்கி வருகின்றன வென்றும், தமக்குத் தாமேகண்டு தேர்தலில்லாததினால் இதுபோன்ற கதைகளை மெய்யென்று நம்புகிறோமென்றும் "உயிர்நூற்பயிற்சியாலாய பயனென்?" (செந்தமிழ், தொகுதி-ரு-பகுதி-ச-ல்) என்னும் வியாசத்து எழுதியிருந்தோம். உதாரணம் இரண்டொன்றுங் காட்டியிருந்தோம். ஈண்டும் அவ்விஷயத்தையே சற்று விவரித்துப் பரிசோதிப்போம்.

இத்தகைய பொய்க்கதைகள் வழங்குதற்குக்காரணம் தாமே உற்றுநோக்காதது ஒன்றுமாத்திரமேயன்று. சிற்சில சமயத்து மெய்யைக்கண்டிருப்பினும், அம்மெய் வெளிப்படாது அதைச்சுற்றி ஏராளமாய பொய்க்கற்பனைகளை மனதுக்குத்தக்கவாறு புனைந்துவழங்குதலும் மிகுதியாயிருக்கின்றது. உதாரணமாக, மேற் சொல்லப்பட்ட கதையில், தேள்கள் கூட்டமாகப்போனதும் வந்ததும் உண்மையே. ஆனால் அவற்றிலொன்று கொட்டினதால் கற்பாறை பிளந்ததென்பது பாரிசேடவலங்காரத்தின்பாற்படும். அக்கதை அப்பிராமணனுடைய கற்பனைசக்தியைக் காட்டியதேதவிர அவனது உண்மை பேசுந்தன்மையை விளக்கிற்றன்று.

தேளானது தன்முதுகு வெடிக்க அதன்வழி குஞ்சுபொரிக்கின்றது என்று நம்மவர் கொண்டாடுங் கொள்கைக்குக் காரணம், குஞ்சுபொரிக்குந் தாய்த்தேளின் மேற்புறத்து அநேக குஞ்சுகள் புலப்படுவதினாற் போலும். ஆயினும், தாயின்முதுகு பிளப்பதால் குஞ்

சுகள் வெளிவரவில்லை யென்பது அவ்விஷயத்தை நேரே கண்டார்க்குப் புலப்படும். தேளின் அடிப்புறத்திருக்கும் ஒரு சிறு துவாரத்தின் வழியே குஞ்சுகள் ஒன்றன் பின்னொன்று வெளிவர; அவை மிகச்சிறியவை ஆனபடியினாலும், பிறந்ததும் தாமே வெளியேசென்று உணவுமுதலியவை சேகரிக்கச்சக்தியற்றவை ஆனபடியினாலும், அவற்றைத் தாயானது, தன்போல் ஆமளவும், தன்முதுகின்மேற் சுமந்து செல்லும். அப்பொழுதத்து, இக்குஞ்சுகள் பன்முறையும் தோலுரித்து, வரவரப்பருத்து, தந் தாய்போலாகவே, தாயின் முதுகைவிட்டு விலகும். ஒவ்வொரு சமயத்து இருபது முப்பதுக் கணக்காய் இக்குஞ்சுகள் தாயின் மேற்புறத்து வாகன மேறிச் செல்லும். இவ்வினைதத்தை யறியாது, தாயின்முதுகு வெடிக்கக் குஞ்சுவெளிப்போம் என்று பொய்க்கதை புனைந்து வழங்குவார்களோ! இங்ஙனமே, கரப்பான் பூச்சியும், முதுகு வெடித்துக் குஞ்சை ஈன்றதும் இறந்துவிடும் என்பதும் நம்மவர்கட்குள் வழங்காநின்ற ஒரு கொள்கை. இதுவும் முன்கதைபோல் அபத்தமே. முதன்முதல், கரப்பான்பூச்சி நேராகவே தாயின்வயிற்றிலிருந்தே குஞ்சாக வெளிவருவதில்லை. தாய் முட்டையிட, அம்முட்டையினின்று சிறிது காலஞ் சென்றபின் குஞ்சு வெளிவரும். உண்மை விஷயம் இங்ஙனமிருப்ப கதைவழங்குவதற்குக் காரணந்தான் என்னையோ? முட்டையினின்றும் குஞ்சு வெளி வந்தபின் அது பன்முறையும் தோலுரிக்கும். இவ்வண்ணம் பாம்புபோல் தோலுரிப்பதையும், உரிக்கப்பட்ட தோலைக் கூடாக அப்பால் எறிவதையும், எறிந்த தோலுக்குள்ளிருந்து குஞ்சுவருவதையுங் கண்டு மயங்கினர்கள் போலும்!

பச்சைப்பாம்பு கண்ணைக்குத்துமென்பதும், அரணை, மண்ணுளிப்பாம்பு இவை நாவினால் தீண்டினவளவில் மரணம் நேரிடுமென்பதும், தேவாங்கு எக்காலத்தும் அழுதுகொண்டிருக்குமென்பதும், வௌவாலுக்கு வாய் வேறு, அபானம் வேறு என்ற வித்தியாசமில்லாது ஒரே துவாரத்தால் உண்பதும் மலசலம் போக்குவதும் என்பதும், இன்னும் இவைபோன்ற அநேக கதைகளின் உண்மை விசாரிக்குமிடத்து இவையனைத்தும் பொய்யென்றே நிரூபிக்கலாம். மனிதனுடைய மற்றைய அவயவங்களையெல்லாம் நீக்கி அவனுடைய

கண்களினிடத்து பச்சைப் பாம்புக்கு அத்துணைக் காதலுண்டாகக் காரணமென்னவோ? அது ஒன்றை எதிர்த்து வருங்கால், "வளையாது நேராகக் கம்பிபோல் செல்கின்றபடியாலும், எதிர்க்கும் பொருள் மனிதனாயின் அவன் பாம்பையே நோக்கி நிற்பதினாலும், அவனை நோக்கி நேராகப் பாம்பு வரவே தன் கண்களைக் கொள்ளைகொள்வதற்கே அது வருவதாக இவன் தன் மனத்தில் நினைத்துக்கொள்வதாலும், அத்தீங்கற்ற பாம்பின்மேல் இப்பழி ஏற்பட்டதுபோலத் தோன்றுகிறது. இதைப்போலவே அரணையும், மண்ணுளிப் பாம்பும் தீங்கற்றவையாம். இத்தீங்கற்ற சுசீலர்களை வீணில் ஜனங்கள் துன்பப்படுத்துவார்கள் என்று நம்பியோ இக்கதைகளைப் புனைந்து, அவை காரணமாக அச்செந்துக்களைக் கண்டதும் நம்மவர் ஓடும்படி நேர்ந்தது. தேவாங்கானது அழவேண்டிய காரணந்தான் என்னையோ? மனிதனைப்போல் சற்றேறக்குறைய உருவங்கொண்டிருந்தும், தானும் மனிதனைப்போல் ஜீவப் பிராணிகட்கெல்லாம் தலைவனாகவில்லையே என்று அழுகின்றதோ? அல்லது பிரமன் தனக்கு இத்துணைப் பெரிய கண்களைக்கொடுத்தும் பகற்காலத்துப் பார்க்குஞ் சக்தியற்றவையாகச் செய்தானே என்றுதான் அழுகின்றதோ? அல்லது தான் அழாமலிருக்கும்போதே அழுகின்றது என்று தன்மேல் பழிசொல்லுகிறார்களே என்றுதான் அழுகின்றதோ? தேவாங்கின் கண்கள் மிகப்பெரியவாயினும், அவற்றின் அமைப்பு அதிக வெளிச்சத்தைக் கண்டால் சுருங்குந் தன்மையது. ஆனால் பூனையின் கண்போல இராக்காலத்து நன்கு பார்க்கும் வல்லமை கொண்டன. பகற்காலம் பார்க்கவொண்ணாக் கண் கொண்டதாலும், இரவுமுழுவதும் அலைந்து திரிந்து ஆகாரம் முதலியவை சேர்க்கவே தூக்கமில்லாமற் போவதாலும், பகற்பொழுதாவது தூங்குதல் அதற்கு முக்கியமானதாலும், அது கண்ணைத் திறவாது தலையைத் தொங்கவிட்டு, மிகவும் வாடினாற்போலத் தோன்றுகிறது. அது காரணம்பற்றி அது அழுகின்றது என்பது பொய்க்கதையே. வௌவாலைப்பற்றிய கதையும் பொய்யாம். இறகு பெற்றிருப்பினும் அது ஒரு மிருகமே. முன்னங்கால் இரண்டும் இறகுகளாக மாறிநிற்கின்றன. பின்னங்கால்களின் நகங்கள் கொக்கிபோல் வளைந்திருக்கும். அவற்றினுதவியால் தலைகீழாக வீட்டின் மச்சுப் பலகைக

ளில் மாட்டிக்கொண்டு தொங்கியாடும். அப்போது வௌவாலின் வாயானது கீழ்ப்புறம் நோக்குமல்லவா? ஆனால் அங்நிலையிலிருந்தபடியே மலஞ்சலம் போக்குவதால் அதற்கு வாயே அபானமென்று சொல்லலுற்றார்கள். அங்ஙனஞ் சொல்வார் வௌவாலில் ஒன்றைப்பிடித்து பரீட்சித்திருப்பரேல், அவர் சொல்லும் பொய்யை மெய்யென்று ஆரவாரஞ் செய்யாதிருப்பர். இவர்கள் கூற்று முன்னொருகாலத்து யவனதத்துவ சாஸ்திரிகளுக்குள் இருகட்சியார் கொண்ட கூற்றையொக்கும். அவ்விற்பன்னர்கட்கு ஒருசந்தேகம் நிகழ்ந்தது; அதாவது, விளிம்புவரையில் ஒரு பாத்திரத்து நீரை வார்த்து அதில் இறந்த மீனைப் போட்டால் நீர் ததும்பும் என்றும், உயிர்கொண்ட மீனைப்போட்டால் நீர் ததும்பாது என்றும், செப்பினர் ஒருசாரார். அதற்கு மாறாகவே கொண்டார் மற்றொருசாரார். ஆனால், இறந்த மச்சத்தையாவது உயிருள்ள மச்சத்தையாவது பாத்திரத்து நீரில் போட்டு நேரே கண்டு, எவர்கொள்கை உண்மையது என்றறிய ஒரு திறத்தார்க்காவது மனதில் தோன்றவில்லை. அங்ஙனமே நம்மவர்களும் ஒரு கதையைக் கட்டி அதையுலகத்துப் பரவும்படி செய்வதற்கு முன்னால் அக்கதைக்குத் தக்க ஆதாரம் ஏதேனுமுளதோ என்று பார்க்குமறிவிலராய் அத்தகைய கதைகளைப்புனைந்து பரப்புகிறார்கள்.

நல்ல பாம்பு காற்றையுண்டு காலங்கழிக்குமென்பதும் சாரைப்பாம்புடன் புணருமென்பதும் மேற்போந்தவற்றைப்போல் உண்மையற்றதே. காற்றைப் புசித்துக் காலம் போக்குவதற்கு நல்ல பாம்பானது துருவ பிரகலாதர்களைப்போல் ஏதேனுந் தவஞ்செய்கின்றதா? அது தின்று அழிக்கும் தவளையும் எலியும் கணக்கில் அகப்படுமோ? குண்டோதரனுக்கு கூடப்பிறந்ததுபோல் தீனிதின்ன, நல்லபாம்பு காற்றைப்பானஞ் செய்கிறதென்பது அதற்கே கோபத்தை விளைக்குமன்றே? அதுபோலவே, அதன் கீழ்ச்சாதியைச் சேர்ந்த சாரைப்பாம்புடன் புணர்கின்றதுஎன்ற அபவாதக்கூற்று, அதன் காதில் பட்டால் அப்பழியுரைப்பாரை அது சும்மாவிட்டுவிடுமோ? சாரைப்பாம்பும் நல்லபாம்பும் வெவ்வேறு சாதியானதால், ஒருகாலத்தும் அவை ஒன்றோடொன்று சேராவாம். பெண்நல்லரவம்

சாரைப்பாம்பைச்சற்று ஒத்திருப்பதினால், அதைச் சாரையென்றே கொண்டு மயங்கினார்கள் போலும்.

இவை போன்ற கதைகள் நம்மவர்கள் மட்டுமேவழங்கி வருகின்றார்கள் என்னும் பிழையெண்ணங்கொள்ளல் கூடாது. உதாரணமாக ஆங்கிலேயச்சிறுவர்கட்குள், ஒரு கதை இன்றைக்கும் வழங்கி வருகின்றது; அதாவது, தலைமயிரைச்சிறிது நேரம் ஓடுந்தண்ணீரில் போட்டு வைத்திருந்தால், அது பின்பு மலங்கு அல்லது விலாங்கு என்னுமொரு மீனாக மாறிவிடுமாம். அது சில வருடங்கட்குமுன் ஆங்கிலேயரில் வயது சென்றவர்களாலும் மெய்யென்று நம்பப்பட்டிருந்தது. இங்ஙனமே, சலதேவதை யென்று ஒருத்தி நீரில்வசிப்பதாயும், மாலைக்காலத்திற் றண்ணீரின் மேல்வந்து பாடுவதாயும், அப்பாட்டின் இனிய ஓசையைக்கேட்டு மனிதர் சமீபத்தில் நெருங்க அவர்களை இரையாக்கிக்கொள்வதாயும் ஐரோப்பியருள் பலருஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் இதற்குக்காரணமாய ஜீவப்பிராணி இன்னதென்று அன்னார் அறிந்தவரல்லர். இவர்கள் தேவதை யென்று மயங்குவது திமிங்கலம் போன்ற ஒரு கடல்வாசி. சாதாரணப்பார்வைக்கு ஒரு பெருமீன் போல் தோன்றினும், திமிங்கலத்தைப்போலவே அதுவும் தன்குட்டிகட்குப் பாலூட்டி வளர்க்கும். அது பெண்ணாயின், அதன் மார்பில் இரண்டு கொங்கைகளுண்டு. அது நீரில் வசிப்பதால் அதன் கால்கள் நீந்துவதற்குதவும் மீன்செட்டைகளாக மாறி நிற்கும். திமிங்கலத்தைப்போலவே இதுவும் காற்றையுட்கொண்டு சுவாசம் விடும். அப்போது காற்றுக்காக கடலின்மேற்புறத்துவரும்; சுவாசம் உள்வாங்குவதினால் நீண்ட கில்லொலியொன்று தொனிக்கும். இத்தொனியே அது பாடுமினிய சங்கீதமாம். அதனுதவியால் மனிதரை இழுத்து விழுங்குமென்பது கற்பனையே.

இவைபோன்ற இன்னுமிரண்டொரு கதையையெடுத்துச்சொல்லி இவ்விஷயத்தை இத்தருணம் விடுப்போம். நத்தை, பனிநத்தை, ஊமச்சி என்று பலபெயர் கொண்டுலவும் கூடுகொண்ட சிறுசிறு பிராணிகள், பாம்புக்காக அக்கூடுகளில் நீர்கொண்டு செல்வதாகச் சொல்லுவார்கள். "துஷ்டனைக்கண்டால் தூரவிலகு," என்ற பழமொழியும், "தீயாரைக் காண்பதுவுந் தீதே" என்ற கவியுமேற்பட்

டிருக்க, இச்செந்துக்கள் நல்லார் தீயாரென்ற வித்தியாசமின்றிப் பாம்ம்புக்கு நீர்கொண்டுபோவது உண்மையாயின், உலகத்தார்க்கு உயர்ந்த ஒரு புத்திமதி புகட்டுவனவாகும். அந்தோ! இவை அத்தகையனவல்ல. தம் முதுகின்மேல் கூடுசுமந்து செல்வது, அபாயகாலங்களில் தம்முடம்பை அதற்குள் சுருக்கியிழுத்துக் கொள்வதற்கே; பாம்பிற்கு நீர் சுமந்து உலவுவதற்கன்று. இப்பொய் வழங்குவதற்குக் காரணம் ஒருவேளை இக்கூட்டை உடைத்தால் அதினின்றும் நீர் வெளிவருவதினாலேயோ?

குளவியானது வண்டைத் தன்னினமாக்குகின்றது என்னும் கதை வெகுநாளாக வழங்கிவருகின்றது என முன்னோர் சமயத்துச் சொல்லப்பட்டிருந்தது. கம்பரும் குளவி "வண்டினைத் தன்னினமாக்குமாபோல்" என்று பாடிப் பெரிதும் வழுவினர். இக்கதையுண்டானதற்குக் காரணம் பின்வருமாறு:—தான் முட்டையிடுவதற்குமுன்னால் குளவியானது மண்ணாலாவது மெழுகாலாவது பல்லறைகள் கொண்ட கூடுகட்டும். அவ்வறை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முட்டையிட்டு, அம்முட்டை பூச்சிகளுக்காய பல்லுருமாறி வெளிவரும் வரையில் அதற்குத் தீனிக்காக வண்டின் புழுக்களைத் தன் கொடுக்கால் தீண்டி, உயிர் நீத்ததும் நீக்காததுமாய் அவற்றை அவ்வறைகளில் வைத்து அறையின் வாயை மூடிவிடும். சிலநாட்செல்லவும், குளவிமுட்டையினின்று சிறுபுழு வெளிவந்து தனக்கு முன்னரே இரையாக வைத்திருக்கும் வண்டின் புழுக்களையுண்டு பருத்து பின்பு தன் புழுவுருமாறிக் குளவியாய், அறையின் சுவரைப்பிளந்துகொண்டு வெளியேறும். குளவி கூடுகட்டுவதையும், வண்டின் புழுவைக் கூட்டில் வைப்பதையும், பிறகு கூட்டிலிருந்து குளவியொன்று வெளிவருவதையும் நம்மவர்கள் நேரில் பார்த்தார்களேயொழிய, குளவி தானே முட்டையிடுவதையும், அது வளர்ந்து வண்டின் புழுவைவுண்பதையுங் கண்டிலர். அக்காரணத்தாலன்றோ வண்டின் புழுவே குளவியாக மாறிற்று என்று மயங்கினர்கள். இறைவனைப்போலாவதற்கு நம்மைச்சூழ்ந்திருக்கும் மாயையை நாம் வெல்லவேண்டும் என்று முறையிடும் நம்மவர்க்கு இம்மயக்கந்தகுதியோ?

வி. நரசிம்மஐயங்கார்.

*

உ

சிவமயம்.

# இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

## தாடகைகாண் படலம்.

இன்ன சேனையை முடிவுற விருந்தவ னோக்கிப்
பின்னைக் காரியம் புரிதுமே னுள்பல வெயரு
முன்னைச் செய்கைமே லொருப்பட லுறுவதே யுறுதி
யென்ன வீரனைக் கைதொழு திளையவ னியம்பும்.

என்னும் நக - ம் செய்யுளில், 'முன்னைச் செய்கைமே லொருப்பட லுறுவதேயுறுதி' என்பது, 'முன்னைச்செய்கைமே லொருப்பட 'முயல்வதே யுறுதி' எனக்காணப்படுகின்றது. உறுவது என்பது முயலவேண்டும் என்னும் பொருளை நன்கு விளக்காமையானும், மோனைக்கியை பின்மையானும் பின்னையதே பொருத்த முடைத்து.

## நாடவிட்ட படலம்.

அவனு மண்ண லனுமனை யையநீ
புவன மூன்றுநின் றுதையிற் புக்குழ
றவன வேகத்தை யோர்கில தாழ்த்தனை
கவன மாக்குரங் கின்செயல் காட்டியே.

என்னும் ரு - ம் செய்யுளில் 'தவனவேகத்தை' என்பது 'சவன வேகத்தை' எனக்காணப்படுகின்றது. 'சவனம்' என்பது வேகத்தை யுணர்த்தலின், அதுவே பொருத்தமுடைத்து. 'சவனவேகம்' ஒரு பொருட் பன்மொழி. இச்செய்யுட்பாடம் இன்னுமொருவாறு காணப்படுகின்றது. எங்ஙனமெனின்;

அவனு மண்ண லனுமனை யையநீ
புவன மூன்றுநின் றுதையிற் புக்குறுஞ்
சவன வேகத் தொருதனித் தன்மையாற்
கவன மாக்குரங் கின்செயல் காட்டுவாய்.

எனக்காணப்படுகின்றது. இதற்குப் புவனமூன்றும் புக்குறும் வேகத்தன்மையாற் குரங்கின் செயலைக் காட்டுவாய் எனப்பொருள் கொள்க. தாதையின் என்பதில் இன்உவமவுருபு. குரங்கின் செயல் காட்டுவாய் என்பது பழிப்பது போலப் புகழ்ந்தது. பின்வரும் என்பதற்கும் இஃது இயைபுடைத்தாதல் காண்க.

ஒஷ

ஏகி யேந்திழை தன்னை யிருந்துழி
நாக நாடுக நாணில நாடுக
போக பூமி பொருந்திட வல்லநின்
வேக மீண்டு வெளிப்பட வேண்டுமால்.

என்னும் சு - ம் செய்யுளில், 'போகபூமி பொருந்திட வல்லநின்' என்பது, 'போகபூமியு நாடுக புக்குநின்' எனக்காணப்படுகின்றது. 'பொருந்திட' என்பதை வியங்கோண் முற்றாகக் கொண்டு முடித்த லும் பொருந்துமாயினும் 'நாகநாடுக' என்பதற்கிசைபுடைத்தாயும் வருதலின் இதுவே சிறப்புடைத்து. 'பொருந்திட' என்பதை எச்ச மாகக்கொண்டு பொருள்கோடல் சிறிதும் பொருந்தாது.

ரஷ

நொய்தி னம்மலை நீங்கி நுமரொடும்
பொய்கை யின்கரை பிற்படப் போதிராற்
செய்ய பெண்ணுக் கரியபெண் ணைச்சில
வைக தேடிக் கடிது வழிக்கொள்வீர்.

என்னும் கடு-ம்செய்யுளில், 'செய்யபெண்ணுக் கரியபெண்ணைச் சில' என்பது, 'செய்யபெண்ணைக்கரியபெண்ணைச்சில' எனக்காண ப்படுகின்றது. 'செய்யபெண்ணை' 'கரிய பெண்ணை' எனவருதல் சிறப்புடைத்தாதல் காண்க. பின்னும் 'பெண்ணை நண்ணினர் பெ ண்ணை நாடுவார்' எனவருதல் காண்க.

ரஷ

அஞ்சுவரு வெஞ்சுரனு மாறுமுகன் பெருஞ்சுனையு மகிலோங்கார
மஞ்சிவரு நெடுங்கிரியும் வளநாடும் பிற்படப்போய் வழிமேற் சென்று
னஞ்சுவரு மிடற்றரவுக் கயிர்துனி கொடுத்தாயைக் கலுழ னண்ணு
மெஞ்சினமா கேதப்பொருப்பை யிறைஞ்சியதன் புறஞ்சாரவேகி மாதோ.

என்னும் உடு - ம் செய்யுளில், 'ஆறுமுகன் பெருஞ்சுனையும்' என்பது ஆறுமகன் பெருஞ்சுனையும் எனவும், 'நஞ்சுவரு மிடற்றரவுக் கமிர்துநனி கொடுத்தாயைக் கலுழனண்ணும்' என்பது, 'நஞ்சுவரு மிடற்றரவுக் கமிர்துநனி கொடுத்தாயைக் கலுழனீக்கும்' எனவுங் காணப்படுகின்றன. சுரங்களும், ஆறுகளும், சுனைகளும், கிரிகளும், நாடுகளும் பிற்படப்போய் என்பதே கருத்தாகலானும், பின் ஆறுசெல்படலத்து, 'ஆறுமுகன் பெருஞ்சுனை' ஒன்று கூறப்படாமையானும், 'ஆறுமகன் பெருஞ்சுனை' என்பதும், கலுழன் தன்றுயாகிய வினதையை அடிமையினின்று நீக்கிய சரிதத்தைக் குறிப்பித்ததாகலின் 'ஆயைக்கலுழ னீக்கும்' என்பதும் பொருத்தமுடையவாதல் காண்க. கலுழன் வினதையை அடிமை நீக்கிய சரிதத்தைச் சேதுபுராணம் கத்துருச்சருக்கத்திற் காண்க.

௬௪

இருவினையு மிடைவிடா வெவ்வினையு மியற்றுதே யிமையோ ரேத்துந்
திருவினையு மிபெதந்தேர் சிறுமையையு முறையொப்பத் தெளிந்துநோக்கிக்
கருவினைய திப்பிறவிக் கென்றுணர்ந்தாங் கதுகளையுங் கடையின் ஞானத்
தருவினையின் பெரும்பகைஞ ராண்ளரீண் டிருந்துமடி வணக்கற் பாலார்.

என்னும் உஎ-ம் செய்யுளில், 'இமையோரேத்துந் - திருவினையும்' என்பது இமையோரெய்து - திருவினையும்' எனவும், 'கருவினையதிப்பிறவிக்கென் றுணர்ந்து' என்பது 'கருவினையின் பலபிறவிக்கட்டுணர்ந்து' எனவும் காணப்படுகின்றன. 'இமையோரெய்து' திருவேயன்றி 'இமையோரேத்து' திருவன்மையானும், பலபிறவிகளுக்கேதுவாகிய கட்டையுணர்ந்து எனப்பொருள் கோடலே பொருத்த முடையதாகலானும் பின்னையவே பொருத்தமுடையவாதல் காண்க.

௬௫

நீமெய்யா யுணர்தி யைய நிரைவளை மகளிர்க் கெல்லாம்
வாய்மையா லுவமை யாக மதியறி புலவர் வைத்த
தூய்மையா மென்ற போது மல்லன சொல்லி ஞெனு
மாமையா மழலை யாடன் புறவடிக் கிழுக்க மன்றே.

என்னும் ௯௪ - ம் செய்யுளில், 'தூய்மையா மென்றபோது மல்லனசொல்லிஞெனு-மாமையா மழலையாடன் புறவடிக்கிழுக்கமன்றே'

என்பது, 'ஆமையா மென்ற போது மல்லன சொல்லினு - மாமையா மழலையாடன் புறவடிக்கிழுக்கமன்றே' எனக்காணப்படுகின்றது. முன்னையது பொருளினையின்றுதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. 'வைத்த - ஆமை' என்பது சிறந்த இயைபுடைத்தாதல் காண்க.

௬௪

வினைவரா லரிய கோதைப் பேதைமென் கணைக்கால் வெய்ய
வினைவரா லரிய வின்ன நேர்படப் புலவர் போற்றுஞ்
சினைவரால் பகழி யாவ நெற்சினை யென்னுஞ் செப்ப
மெனைவராற் பகரு மீட்டம் யானுரைத்தின்ப மென்றே.

என்னும்-௬௪-ம் செய்யுள்;

வினைவரா லரிய கோதை மென்கணைக் காலுக் கொப்பு
வினைவரா லரிய மற்று நேர்படப் புலவர் போற்றுஞ்
சுனைவரால் பகழிக் கூடு தோற்றவென் றுரைக்கிற் றாயோ
ரினைவராற் பகரு மீட்ட யானுரைத் தின்ப மென்றே.

எனக்காணப்படுகின்றது. முன்னையதினும் பின்னையது பொருளினையுடைத்தாதல் காண்க. 'சினைவரால்' 'பகழியாவம்' சிறிதும் பொருத்தமின்மை காண்க. இனைதல் - வருந்தல். ஈட்ட - பெயர்.

௬௫

அரம்பையென் றற்கு மாதர் குறங்கினுக் கமைந்த வொப்பின்
வரம்பையுங் கடந்த போது மற்றவை வகுக்க லாமோ
நரம்பையு மமிர்த நாறு நறவையு நன்னீர்ப் பண்ணைக்
கரும்பையுங் கடந்த சொல்லாள் கவாற்கிது கருது கண்டாய்.

என்னும் ௬௫ - செய்யுளில், 'அரம்பையென்றற்கு மாதர்' என்பது, 'அரம்பை யென்றனக மாதர்' எனக்காணப்படுகின்றது. 'அரம்பையென்று அமைந்த ஒப்பு' எனமுடிந்து பொருள் சிறத்தலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

(இன்னும் வரும்,)

சி. கணேசையர்.

# கல்லாடம்.

வாய்ந்தபொருட்கொருபொருளாய்க்கலைவாணிக்கருள்கொழிக்குமனமாய்ப்
ஆய்ந்தமுத்தமிழ்வடித்துக்கல்லாடமெனவொருநூலருளியிட்டார் [பாரி
தேய்ந்தமதிச் சடைப்பரமர் கருணை பெறச் சங்கமுது செல்வர் வாழ்த்தக்
காய்ந்த புலனடக்கியுயர் பெருஞானம் பழுத்தருள் கல்லாடனாரே.

"கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயு
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்.

கல்லாட முகப்பில் அச்சியற்றப் பெற்றிருக்கும் மேலுள்ள இவ்விரு செய்யுட்களாலும் அவ்வரிய நூலைச் செய்தவர் மதுரை முத்தமிழ்ச் சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவராகிய கல்லாடரென்று வெளியாகிறது. ஆனால் தற்காலத்துள்ள சில தக்க தமிழ் மகாவித்துவான்கள் கடைச்சங்ககாலத்திற்குப் பின்றோன்றி அக்கல்லாடனார் திருநாமத்தையே தரித்துக்கொண்டிருந்த வேறொரு தக்க புலவரால் திருவாய் மலர்ந்தருளியிருக்கவேண்டுமென்கிறார்கள். இதற்குக் காரணம் கடைச்சங்க காலத்திற்குப் பின்னிகழ்ந்ததாகத்தெரியவரும் சிற்சில திருவிளையாட்டுக்கள் இந்நூலிற் கூறப்பெற்றிருப்பனவேயாம். முந்திய கல்லாடர் கூறினும் பிந்தியோர் கல்லாடர் கூறினுங்கூறுக. இவ்வரிய நூலிலுள்ள அகவற்பா அவ்வளவும் அதிமதுரம்பழுத்து தேன்பெருக்கும் அற்புதவிற்பன விசேடவளப்பமும் விழுப்பமு முள்ளனவென்று வித்துவான்களத்தனை பேர்க்கும் ஒத்தகருத்தாகவே யிருக்கும். இந்நூல் கடவுள்வணக்க முளப்பட நூற்றிரண்டகவற்பாக்களையுடையதாகக் காணநிலவுகிறது. இதில் முப்பத்தேழகவற் பாக்களுக்குத் திருநெல்வேலியில் ஈசானமடாலயத்திற் றிருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனகுரு மூர்த்தங்களுள் ஒருவராயெழுந்தருளியிருந்து இலக்கணக்கொத்துமுதலிய அரியநூல்களருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ-சுவாமிநாத தேசிகமூர்த்திக்கு முத்தமிழாசிரியராயிருந்த ஸ்ரீ மயிலேறும் பெருமாள்

பிள்ளையுரையியற்றியிருப்பதும், மற்றைய அறுபத்துமூன்றிற்குப் புதுவைச் சுப்பராயமுதலியாரென்பார் பதவுரையியற்றியிருப்பதும், கீர்த்தனம், இரத்தினப்பரீக்ஷை இசையாகியஇம்மூன்று விஷயங்களையும் தனித்தனிகுறிக்கும் மூன்றகவற் பாக்களுக்குப் பொருள்தெரியாமையால் விடப்பெற்றிருப்பதும், புலவர்திலகர்களறியாததன்று. இந்நூன்முழுதுமுள்ள எல்லா அகவற்பாக்களுக்கும் பொருள் விளக்கியும் திருத்தியும் புதுக்கியும் கூட்டியும் ஓர்நல்லுரை யெழுதி வெளியிட்டால் பேருபகாரமாயிருக்கும். இந்நான்காந் தமிழ்ச்சங்கத்தில் நக்கீரர்போல் விளங்கும் ஸ்ரீமத்-ரா. இராகவையங்கா ரவர்களிடம் எமதெண்ணத்தைத் தெரிவித்ததில் ஒருவாறிணங்கினார்கள். ஆயினும் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பனை இராமகாதைபாடச் சடையவள்ளல் தூண்டியாங்கு நமதையங்காரவர்களைத் தூண்டுதல் செய்து எந்தவள்ளற் பெருமக்களாவது முன்வந்து முயற்சித்து முடிப்பார்களேயானால் அவர்களுக்குப் பெரும்புகழும் பெரும்புண்ணியமுமாம். நிற்க,

இந்நன்னூல் செய்தார் முற்கல்லாடரென்பதற்கும், பிற்கல்லாடரென்ற ஒருவரென்பதற்கும், இந்நூலால் நுவலப்பெறும் ஆலவாயண்ணல் திருவிளையாடல்களை யாராய்வதின்றியமையாமையாற்றொடர்ந்தாராயத் துணிந்தோம். இதில் மூன்றும் அகவற்பாவில்,

"பொன்னகர்க் கூடற் சென்னியம் பிறையோன்
பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக் கற்பட வுதவி
யென்னுளங் குடிகொண் டிரும்பய னளிக்குங்
கள்ளவிழ் குழல்சேர் கருணையெம் பெருமான்
மலர்ப்பதம் நீங்கா வுளப்பெருஞ் சிலம்பு"

என்று கூறியிருப்பதால் தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாடல் இனிது விளங்குகிறது. நான்காம் அகவற்பாவில்,

"பெருநீர்வையை வளைநீர்க்கூட
லுடலுயிரொன்னவுறைதருநாயகன்

கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி
யைவாய்க் காப்புவிட் டணிபூ ணணிந்து
விரிசடை மறைத்து மணிமுடி கவித்து
விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி யெடுத்து
வழுதி யாகி முழுதுல களிக்கும்
பேரரு ளுடையவன் சீரருள் போல"

என்றதால் (2) தடாதகைப் பிராட்டியாரைச் சோமசுந்தரக் கடவுள் மணந்து பாராண்டவிளையாடல் விளங்காநின்றது.

ஐந்தாமகவலில்,

"உலகிய னிறுத்தும் பொருண்மா பொங்க
மாறனும் புலவரு மயங்குறு காலை
மூன்றூறும் பெருமறை மூளைத்தருள் வாக்கா
லன்பினைந் திணையென் றறுபது சூத்திரங்
கடவுமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற்
பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்"

இதனானும், ஸ்ரீமுருகக்கடவுள் துதியாகிய இரண்டாமகவலில்,

"மணிக்கா லறிஞர் பெருங்குடித் தோன்றி
யிறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப்
பெருந்தமிழ் விரித்த வருந்தமிழ்ப் புலவனும்
பாய்பா ரறிய நீயே யாதலின்."

இதனானும்(3)சங்கத்தார் கலகந்தீர்த்த திருவிளையாடல் தெரிகிறது.

ஏழாமகவலில்,

"கூடன் மாநக ராட வெடுத்த
விரித்த தாமரை குவித்த தாளோன்"

என்றதால் (4) கான்மாறியாடின விளையாட்டு விளங்காநின்றது.

பத்தாம் அகவலில்,

"புண்ணியர் தலைழுத்த மூன்னோர் நாளி
லிருவிர னிமிர்த்துப் புரிவொடு சேர்த்துக்
குழையுடற் றலைவிரி கைத்திரி கறங்க
வொருவிரற் றெறித்து மைவிரற் குவித்தும்
பெருவா யொருமுகப் படகம் பெருக்கத்

தடாவுட லும்பர்த் தலைபெறு முழவ
நீன்முகந் தட்டி நடுமுக முரப்ப
வொருவாய் திறந்துட் கடிப்புடல் விசித்த
சல்லரி யங்கைத் தலைவிரற் றுக்கக்
கயந்தலை யடியெனக் கயிறமை கைத்திரி
யிருவிர லுயர்த்திச் செருநிலை யிரட்ட
விருதலை குவிந்த நெட்டு டற்றண் ணுமை
யொருமுகந் தாழ்த்தி யிருசடிப் பொலிப்பத்
திருமல ரெழுதிய வரையிரு பத்தைந்
தங்குலி யிரண்டிரண் டணைத்து விளர்நிறீஇ
மும்முகக் கயலுடன் மயிர்க்கயிறு விசித்த
கல்ல வடத்திரள் விரற்றலை கறங்க
மாக்கா லன்ன வொருவாய்க் கோதை
முகத்தினுந் தட்ட மூக்கினுந் தாக்க
காடிரு முனிவர்க் காடிய பெருமான்”

என்றதால் (5) வெள்ளி யம்பலத்திருக்கூத்தாடிய விளையாடல் விளங்குகிறது. பன்னிரண்டா மகவற்பாவில்,

“பனிக்கதிர்க் குலவன் பயந்தருள் பாவையைத்
திருப்பெரு வதுவை பொருந்திய வந்நாட்
சொன்றிப்பெருமலை தின்றுநனி தொலைத்த
காருடற் சிறுநகைக் குறுந்தாட் பாரிட
மாற்று தலந்த நீர்நசை யடக்க
மறிதிரைப் பெருநதி வாவழைத் தருளிய
கூடலம் பதியுறை குணப்பெருங் கடவுள்”

என்றதால் (௬) அன்னக்குழியும் வையையும் அழைத்த ஆடல் விளங்கா நின்றது.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

நா. கீ. பத்திராதிபன்

திருச்சிற்றம்பலம்.

# கம்பராமாயணம்.

செந்தமிழ் வளங்கெழீஇய இந்நாவலந் தீவகத்துவாழும் நன்மக்களெல்லாம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பெரும் பொருளையும் எளிதிலெய்தி நன்னிலையைத் தலைக்கூடுமாறு எம்முன்னோர்களாகிய பெரியோர்களருளிப்போந்த நூல்களோ மிகப்பல. பாய்திரைப்பரவைப் படுமணலெண்ணினும் அவற்றை எண்ணுதல் கூடாது.

இவைகளுள் தாரகை நடுவட்டண்மதிபோல இதிகாசங்களெவற்றினும் தூய்மையானும், இனிமையானும், ஓசையுடைமையானும், நன்மொழிபுணர்த்தன் முதலிய பிறவாற்றானுஞ்சிறந்து விளங்குவது இக்கம்பராமாயணமே. இதிகாசம் பரம்பரைச்சரித்திரம். இங்ஙனம் ஆன்றோரெல்லாரானும் ஒருங்கு புகழ்ந்துபாராட்டும் இவ்விராமாயணத்தை, தமிழ்ப்பாஷையிற்றந்தவர், தமிழ் என்னும் அளப்பருஞ்சலதியைக்கடந்த அறிவிற்பெரியராய கம்பர்.

இக்காலத்துக் கற்றறிந்தாருட்சிலர் கம்பர் பாடியது வழுகாண்டங்கள் என்பர். சிலர் ஆறுகாண்டங்களென்பர். வேறுசிலர், கம்பர் பாடிய படலங்கள் நூற்றெண்பத்தொன்று என்பர். சிலர் நூற்றிருபத்தாறென்பர். பின்னர்ச்சிலர், அவர்பாடிய விருத்தங்கள் பன்னீராயிரத்தொருபத்தாறென்பர். வேறுசிலர் பன்னீராயிரத்தெண்பத்தாறென்பர். சிலர், பன்னீராயிரம் என்பர். சிலர், கல்வியிற்பெரியாரைச் சைவரென்பர். சிலர், வைஷ்ணவர் என்பர். சிலர் சாதியில் ஓரரசன்புதல்வர் என்பர். சிலர், பிடாரி பூசகர் எனபர்.

இங்ஙனமெல்லாம் கல்வியிற்பெரியாரையும் அவராற் பாடப்பட்ட திவ்வியமதுரச் செந்தமிழாகிய இராமாயணத்தையும் பற்றிக்கேட்கப்படும் சரிதங்களும் கதைகளுமோ மிகப்பல. பண்டைக்காலத் தமிழ் இராமாயண ஏட்டுப்பிரதிகளின் பிறழ்வே, இவ்வாறெல்லாம்

வழங்கப்பட்டுவருதற்கு ஏற்றகாரணமெனை ஊகிக்கப்படலாம். அங்ஙனமன்றி வெள்ளியம்பலத்தம்பிரான் முதலியோர் திருத்தொண்டர் புராணமென வழங்கும் பெரியபுராணம் முதலியவற்றில் சில செய்யுள்களைப்பாடி இடைமடுத்தாற்போல இதனினும் அவ்வாறு செய்திருக்கலாமெனக் கருதவுங்கூடும்.

கம்பர் சோணாட்டைத் துறந்துபோகும் வழியில் இராமாயணப் பிரசங்கம் நடக்கக்கேட்டுக் கம்பன் பாடலும் இடையிடையே வழங்கப்படுகின்றன எனக்கூறினர் என்பது இன்றும் வழங்கப்படுமைதீகம். இங்ஙனம் கல்வியிற்பெரியார் காலத்திலேயே இவ்விராமாயணம் இத்துணை மாறுதலடைந்திருந்ததேயெனின் பிறவென்?

இப்பெற்றித்தாய பெருமையிற்சிறந்த அருமையாகிய இவ்விராமாயணத்தைப் பல பழைய ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு பிழையறப் பரிசோதித்து வெளியிடாமை நம் தமிழ்நாட்டார்பாலுள்ள பெருங்குறைகளுள் ஒன்று.

இக்காலத்துப் பல பழைய ஏட்டுப் பிரதிகளை வருவித்து அவற்றுற் பல அரியநூல்கள் அழிந்துபோகாது வெளியிடுவித்துப் பாதுகாத்துவருபவரும், பல செந்தமிழ் நூல்களை வெளியிடுவித்துப் பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பை நிறுவிய ஸ்ரீமாந். பொன்னுச்சாமித்தேவரவர்கட்கு மதலையாயுதித்த "வாட்டமிலருளுங் கோட்டமில்குணமும், அசையா நிலையும் நசையா மனனும், வெகுளாப்பண்பும் விடாப்பேரன்பும், மரீஇய வள்ளலும், செந்தமிழை வளர்க்கும் அரசர் பெருந்தகையும், நல்லிசைப்புலவர்பெருமானும், சிவோபாசனவிசிட்டரும் ஆகிய ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவர் அவர்கள், தாம்பேரணிகலனகப் பூண்டொழுகும் செந்தமிழ்ப் பரிபாலனச் செயல்களுள் இவ்விராமாயண பரிசோதனையையும் ஒன்றாக மதித்துக் கடைக்கணிப்பார்களேயென்னில் இத்தமிழகம் என்றும் அவர்கட்குக் கடமைப்பட்டதேயாம். அன்றியும் கல்வியிற் பெரியார் நம்மனோருக்காக அருளிய இந்நூலும் பயனுடைத்தாம். வித்வ சிரோமணிகளுட்டலைமை பெற்று விளங்கும் சின்னைகம் ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் இவ்விராமாயணத்தைப் பரிசோதனைசெய்து வெளியிடுவதாக அறிதல் தமிழ்மக்கள் விரும்பத்தக்கதேயாம்.

மேலேகூறிப்போந்த இராமாயண ஏட்டுப்பிரதிகளின் வித்தியா சங்களைச் செந்தமிழறிஞர்களுக்குக் காட்டுமாறு சில ஏடுகளில் அதிக மாகக் காணப்படுகின்ற செய்யுள்களை எழுதுவேன்.

கடவுள் வாழ்த்து.

பத்திர தன்றரு பாலன் மாக்கதை
சித்திரப் படமிசை தீட்டச் சீர்பெறு
மத்தக விழிமுதன் மதலை மாமுக
வித்தகன் மலரடி வியந்து போற்றுவாம்.

இவ்விருத்தம் விநாயக வணக்கமாகக் குறிப்பிடப்பட்டுளது.

மூப்ப ரப்பொரு ளுக்கு முதலுமாய்
எப்பொ ருட்கு மிறையவ னுமெனச்
செப்பு நான்மறை தேடிய செய்யதாள்
ஒப்ப வைத்தெம துள்ளத் துணருவாம்.

முத்தி றத்துல கத்துயிர் மூலமாய்
நித்த முத்தி யளித்தரு ணீதிமா
கத்த னுத்தம காரணக் காட்சிசேர்
வித்த கச்சா ணத்தினை வேண்டுவாம்.

ஸ்ரீ இராமபிரான்.

உலக ளந்தவ னும்பர்க டம்பிரான்
திலக வானுதற் செந்திரு நாயகன்
இலகு செங்கதி ரோன்குலத் தெம்பிரான்
அலகில் சோதி பதாம்புயத் தாக்கமே.

சீதாபிராட்டி.

நெஞ்சகத் துணர்வோர் நிலைப்பதம் பெறுவர்
நெடும்பக லமரரை வருத்தும்
வஞ்சகத் தாக்கர் குலத்தொடு மடிய
மலர்துறந் தவனியிற் பிறந்து
விஞ்சகத் திலங்கை யிடைச்சிறை யிருந்து
விண்ணவர்க் கருந்துய ரகற்றும்
மஞ்சகத் திருண்ட கருங்குழற் சனகி
மங்கைதன் சரண பங்கயமே.

### நூற்பயன்.

*மற்றொரு தவமும் வேண்டா மணிமதி லிலங்கை மூதூர்*
*செற்றவன் விசயப் பாட றெரிந்ததி லொன்று தன்னைக்*
*கற்றவர் கேட்போர் நெஞ்சங் கருதுவோ ரிவர்கள் பாரீ*
*திற்றா சாள்வர் பின்னு மும்பர்வா முலகுஞ் சேர்வார்.*

(இன்னும் வரும்)

யாழ்ப்பாணம், இணுவில். } அ. க. வைத்தியலிங்க உபாத்தியாயர்.

---

## நல்லொழுக்கம்.

[இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்ப்பு.]

(கூஎ-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆனால் இனிமையான தொழில்களில் புத்தி தத்வத்திற்குரியவைகளோ சிறந்தன. இவ்வாறே தங்களுக்கு நித்யமாய் ஏற்பட்ட தொழிலினின்றும் ஒழிவுபெறுகின்ற மனோமுயற்சியுடையவர்கள், சிலர் சாஸ்திரங்களிலும், சிலர் கைத்தொழில வித்தைகளிலும், அனேகர் கல்வி ஆராய்ச்சியிலுமாகிய மற்றமுயற்சிகளில் ஆறுதலடைகின்றனர். அவ்விதமான ஆறுதல்கள் தன்னையப் பாராட்டல், இழிவான இவ்வுலககுணங்கள் ஆகிய இவற்றினின்றும் இரட்சிப்பதற்கு இயைந்த சிறப்புடையன. "இனிய தொழிலை உடைத்தாயிருக்கின்றவன் பாக்கியம்பெற்றவனாகிறான்" என்று 'லார்ட் புரோகாம்' சொன்னதாக நம்புகிறோம். அவரே ஓர்நிலையின்றி மாறத்தக்க தன் இயற்கைக் குணத்தால், பாஷாகிரந்த ஆராய்ச்சியினின்றும், நயாய சாஸ்திரத்துக்கும்; சரித்திரம், ஜீவிய சரித்திரத்தினின்றும், ஜனசங்க உபகாரசாஸ்திரத்திற்குமாகத் தன் புத்தியைச் செலுத்துகின்றனர். லார்ட்புரோஹாம் என்பவர் 'நாவல்' என்னும் 'கட்டுக்கதை எழுதியிருப்பதாகவும் தெரியவருகிறது. பிளாக்உட்இல் அனேகவருஷங்களு

கு முன் வெளிவந்த "மேன்-இன்-தி-பெல்-என்னும் கதை யும் அவரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகிலும் புத்திதத்வ ஆராய்ச்சியிலுள்ள இனியவேலைகளை மிகவும் கடினமாய் உழைக்கவிடத்தகாது. உழைக்காவிட்டால் மனிதனுடைய சுபாவ மானது ஆறுதல்பெற்று சந்தோஷமும் பலமும் அடைய விடாமல் அவனுக்கு எய்ப்பும் இளைப்பும் கஷ்டமும் உண்டாக்கி அவனது வேலைக்கே திரும்பவும் அவனைச் செல்லும்படி செய்கின்றது.

'லார்ட் புரோஹாமே' யன்றி அனேக உழைப்பாளிகளான இராஜதந்திரிகள், தங்கள் உத்தியோகத்தின் விட்டாற்றிநேரத்தில் இவ்வுலகத்தில் மேற்கோளாக ஏற்பட்ட மேலானகிரந்தங்களைச் செய்துஇளைப்பாற்றிக்கொண்டனர். இவ்வாறே, வீலருடைய வியாக்கியானங்கள்,நீர்ந்தகிரந்தங்களாக இன்னும் நிகழ்கின்றன. அவைகள் எழுதப்பட்டதெளிவும் பலமுமான நடையானது க்ஸ்லெஷேபன் உடைய அதே அந்தஸ்தில் அவரைவைத்தது. அவரும் உத்தியோகமுயற்சியுடன், வித்யாமுயற்சியையும், ஒருங்கே சித்திபெறவஹித்தனர்.

'பெரிய சல்லி' என்பவர் மந்திரியாகி, அவமானப்பட்டு வேலையைவிட்டு நீங்கின பொழுது தன்சந்ததியால், தான் இராஜதந்திரத் தலைவனாக இருந்ததைப்பற்றிக் குணதோஷங்களை உணர்ந்து நிர்மானிக்குமாறு தன்னுடைய விட்டாற்றிநேரத்தில் தன்வாழ்க்கைச்சரித்திரத்தை எழுதுவாராயினர். இதுவுமன்றி 'ஸ்கியூடரி' வகுப்பாரின்பிரகாரம்,கட்டுக்கதையின் ஒருபாகத்தையும் எழுதியிருந்தனர். அவர் இறந்தபிற்பாடு அதின் கையெழுத்துப்பிரதியானது, மற்றப்புஸ்தகங்களோடு காணப்பட்டது.

'டர்காட்' என்பவர் தன்சத்துருக்களின் தந்திரங்களால் இழந்துவிட்ட உத்தியோகத்தின் வருத்தத்தை தத்துவசாஸ்திர ஆராய்ச்சியினால் மாற்றிக்கொண்டனர். தனக்குச் சிறப்பத்திற் பிரியமாயிருந்த பூர்வகிரந்த ஆராய்ச்சியிற் கவனத்தைத்திருப்பினர். அவருடைய நீண்ட யாத்திரைகளிலும், தொண்டைப்புகைச்சலால் தொந்தரவுபட்ட இராத்திரிகளிலும் லத்தீன் பாஷையில் செய்யுள் உண்டாக்குவதில் உற்சாகமாயிருந்தனர். ஆகிலும், அதில் இதுவரை

சேமித்து வைக்கப்பட்ட கவியின் ஒரே அடியானது, 'பெஞ்சமின் பிராங்கிலின் உடைய பிரதிமையைக் காட்டுகிறதற்கு உத்தேசித்த தோன்றும்.

கொஞ்சகாலத்துக்கு வசித்து ராஜதந்திர உத்தியோகத்துடன் கல்வி ஆராய்ச்சியும் தங்கள் தொழிலாகக்கொண்டவர். டி. டாக்ருவி வில்லி' 'தியர்ஸ்' கூவியட் லாமார்ட்டைன் என்று சொல்லப்படலாம். ஆனால் மூன்றுவது நெப்போலியன் சீஸரைப்பற்றித்தானெழுதிய சரித்திரத்தால் வித்வக்கூட்டத்தில் தான் ஒருஸ்தானத்தை வெற்றி பெற வகித்தனர்.

நம்முடைய இங்கிலீஷ் ராஜதந்திரிகளுள்ளும் கல்வியாராய்ச்சியானது முக்கிய ஆறுதலாய் இருந்திருக்கிறது. பிட் என்பவர், தம்முடைய உத்தியோகத்தை விட்டு நீங்கினபொழுது, தம் காலத்தவரான பாக்ஸ்(Fox)ஐப்போல் கிரீக் பாஷையிலும், ரோமன் (Roman) பாஷையிலும், உள்ள, பூர்வகிரந்தங்களைக் கற்பதற்குக் களிப்புடன் கவனத்தைத் திருப்பினர். உள்ளபடியே கிரென் வில்லி(Grenville) என்பவர் பிட் (Pitt)என்பவரை இதுவரை விளங்கிய கிரீக் (Geek) பாஷா வல்லவருள் மிகச்சிறந்தவராக நினைத்தார். கான்னிங் (Canning) வெல்லெஸ்லி (Wellesly) ம் வேலையைவிட்டுநீங்கியிருந்தபோது,ஹாரேஸ் (Horrace) என்பவருடைய கீர்த்தனைகளையும், வசைக்கவிகளையும், மொழிபெயர்ப்பதிற் பிரவிர்த்தித்தனர். கல்வியின்பேரில் கன்னிங்காம் (Conningham) என்பவருக்கு இருந்த அவாவானது அவருடைய முயற்சிகளெல்லாம் புகுந்து அவருடைய ஆயுள் முழுமையும் பிரகாசத்தைக்கொடுத்தது. அவரைப்பற்றி அவருடைய சரித்திரக்காரர் சொல்லுகிறதாவது, பிட் (Pitt) என்பவருடைய வீட்டில்நடந்த ஓர் மத்தியானச்சாப்பாட்டுக்குப்பின்னர் அந்தக்கூட்டத்தின் மற்றவர்களெல்லாம்,சல்லாபம்செய்து பிரிந்துகொண்டிருந்தபொழுது, அவரும் பிட் (Pitt) என்பவரும் உடுப்பு அறையின் ஓர் பக்கத்தில் ஓர்மூலையிற் பழைமையான ஓர் கிரீக் (Greek) பாஷா நூலினை, ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பாராயினர். பாக்ஸ் (Fox) என்பவரும் கிரீக் கிரந்தங்களை ஜாக்கிரதையாய் வாசிக்கக்கூடியவர், பிட் (Pitt)என்பவரைப்போல அவரும் லோகோபிரன் ஐவா

சிப்பவராயினர் அவர் இரண்டாவது ஜேம்ஸ் உடையசரித்திரத்தை எழுதுவாராயினர். ஆகிலும் அந்தப்புஸ்தகமானது, சொற்பபாகமாயிருந்துமுழுதும் நிறைவேறவில்லை.

கல்வியை இன்பப்படிப்பாகவும் ஓர் முயற்சியாகவும் வைத்துக் கொண்டவர்களும், கொஞ்சக் காலத்திற்கு முன்வசித்த சிறந்த திறமையும், உழைப்புமுள்ளவர்களுமானவருள் ஒருவர் காலஞ்சென்ற ஸர்ஜார்ஜ் கார்ன்வால்லியுயிஸ் என்பவராயிருந்தார். அவர் சுறுசுறுப்பும் திட்டமும் உழைப்பாளியுமாகிய சிறந்த வேலைக்காரராயிருந்தார். அவர் முறையே தாம் ஸ்தாபித்த பூவர் - லா - போர்ட் - க்கு பிரசிடெண்டு ஆகவும் எக்ஸிக்குயர்க்குரேன் ஸெல்லர்(Chanceller) ஆகவும், ஹோம்சிக்கிரட்டேரிஆகவும், யுத்தத்திற்கு சிக்கிரட்டேரி ஆகவுமிருந்து ஒவ்வொன்றிலும், முற்றிலும் சித்திபெற்ற அதிகாரியாய், இருந்ததால் கீர்த்தியை அடைந்தார். தன்னுடைய உத்தியோக உழைப்பின் மத்தியில் சரித்திரம்; ராஜதந்திர சாஸ்திரம்; வியாகரணம்,மனுஷதத்வ சாஸ்திரம்;பூர்வகிரந்த ஆராய்ச்சி ஆகிய இவைகளில்விரிவான ஆராய்ச்சியையுடைய வராயிருந்தார். அவர் எழுதிய அஸ்டிரானமி ஆப் - ஏன்விபண்ட்ஸ் எஸ்ஸேல் - ஆண் - தி - பார்மேஷன் ஆப் - தி - ரோமன்-லாங்குவேஜஸ், என்னும் கிரந்தங்கள், ஜெர்மன் வித்வான்களிற் சிறந்தவர்களால்மட்டும் எழுதப்படத்தக்கனவாம். அவர் கரடுமுரடானபாஷைகளை அப்பியசிப்பதில் முக்கிய சந்தோஷங்கொண்டு அவற்றில் மிகவும் இன்பமும் ஆறுதலுமுடையவராயினர். அவர் உத்யோக சம்பந்தமான கடிதங்களை உத்யோக வேலைக்குப் பின்னர் புஸ்தகங்கள் வாசிப்பதற்காகத் தூரவைத்து விடுவதால் அவரைமிகவும் லகிரி கொண்டிருப்பதாய் சொல்லிலார்ட் பால் மோஸ்டன் என்பவர் சிலகாலம் கண்டித்தனர். பார்மோஸ்டன் (Palmerston) என்பவர் தனக்குப் புஸ்தகம் வாசிக்கச் சாவகாசமில்லை யென்றும்; கையெழுத்துப் பிரதிகள் வாசிப்பதே தனக்கு முற்றிலும்போதுமானதாயிருந்த தென்றும் தானே சொல்லிக் கொண்டனர்.

ஸர் ஜார்ஜ் லியூயிஸ் (Sir George Lewis) தன் இன்பப்படிப்பைவெகுகடினமாக நடத்தினர். படிப்பில் பிரீதியிருந்திராதவிஷ

யத்தில், அவருடையபயனுள்ள ஆயுளானது நீடித்திருக்கலாம். அவர் உத்யோகத்தில் இருந்தபோதும், இல்லாதபோதும், அவர் வாசித்தும் எழுதியும் ஆராய்வாராயினர். எக்விக்குயர் இன், சென்ஸெல்லர் உத்யோகத்தின் நிமித்தம், எடின்பர்க்ரிவியூ (Edinburgh Review) என்னும் பத்திரிகையின், ஆதி பத்யத்தை விட்டு விட்டனர். திட்டக்கணக்குத்தயார் செய்யாதவேளைகளில் பிரிட்டிஷ் மியூஸியம் (British Museum) என்னும் புத்தக சாலேயிலிருந்த கிரீக் (Greek) பாஷையின் கையெழுத்துப்பிரதிகளின் தொகுதியைப் பார்த்தெழுதுவாராயினர். பூர்வகிரந்தங்களிலுள்ள கடினமான பூர்வசமாசாரத்தை விசாரணைசெய்வதில் விசேஷ பிரீதியுடையவராயிருந்தார். அவர் பிரவிர்த்தித்த முக்யமான விஷயங்களில் ஒன்று யாதெனில், அவர் தன் வழக்கப்படி சந்தேகித்து நம்பிக்கை கொள்ளாத தீர்க்காயுள் சம்பந்தமாகத்தெரிவிக்கப்பெற்ற சங்கதிகளின் உண்மையைத் தெளிவதேயாம். 1852-ம்வருஷத்தில் ஹீயர் போர்ட்ஷைருக்கு சம்மதக்கையொப்பு வாங்குங்காலத்தில் இந்தவிஷயமானது அவர் மனதில் முக்யமாயிருந்தது. ஒரு நாள் தன் கட்சியை ஆதரிக்கவேண்டி ஓர் சம்மதக் கையொப்பக்காரரைக் கேட்டுக்கொண்டபொழுது அவர் தீர்மானமாய் மறுத்துவிட்டனர். வேலேயை விரும்புகிற அவர் சம்மதக் கையொப்பக்காரரை நோக்கி "நீர் எனக்குச் சம்மதக்கையொப்பம் கொடுக்கக்கூடவில்லேயென்று துக்கிக்கிறேன். ஆனல் உம் ஊரில் சாதாரணமான வயசிற்கு அதிகமாய் வசித்தவர் யாராவது உண்டாவென்பதையாவது நீர் சொல்லக்கூடுமா" என்றனர்.

இராஜாங்க உத்யோகத்தில் எடுத்த உழைப்புக்களால் இளைப்புற்ற இராஜதந்திரர்களுக்குக் கல்வியாராய்ச்சியால் ஆறுதல் கிடைத்ததற்கு ஸர் ஜார்ஜ் லீயூயிஸ் (Sir George Lewis) காலத்திலிருந்த அனேகர்களால் திருஷ்டாந்தம் ஏற்படுகின்றது. உத்யோகமுயற்சிவேளையானது விடுதிபெற்றிருந்தாலும், கல்வியாராய்ச்சி ஒருபோதும் நிறுத்தப்படுகிறதில்லே. இராஜ்யகாரியங்களிற் பகைத்து நிற்பவர்களும் ஹோமர் (Homer) ஹோரேஸ் (Horace) இவர்களுடைய கவிகளிற்கைகோத்து நிற்கின்றனர். டெர்பி (Derby) நாட்டின் காலஞ்சென்ற பிரபுவானவர், தம் உத்யோகத்தினின்றும் நீங்கிய பின்

னர், "தி - இல்லியட் (The Illiad) என்னும் கவிக்கு மொழிபெயர்ப்புச்செய்தனர். அவர்வாக்காற்செய்த உபந்நியாசங்கள், மறக்கப்பட்ட பொழுது, அம்மொழிபெயர்ப்பானது வாசித்தவரப்பெறும். அவ்வாறே மிஸ்டர் கிளாட்ஸ்டன் (Mr. Gladstone) என்பவரும், (Studies on Homer) ஸ்டடீஸ் - ஆன் - ஹோமர் என்னும் நூலை அச்சியற்ற தன்வீட்டாற்றி நேரத்தில் தயார்செய்வதிலும் "பேரினீஸ் ரோமன்ஸ்டேட் (Farinis Roman State) இன் மொழிபெயர்ப்பை அச்சுப்பதிப்பித்தலினும், பிரவிர்த்தித்தவராயினர். மிஸ்டர், டிஸ்ரெயிலி (Mr. Disraili) என்பவர் தன் வேலையைவிட்டு நீங்கின பொழுது, லோதேர் (Lothere) என்னும் நூலை உண்டாக்கி மகிமை பெற்றனர். மிஸ்டர் டிஸ்ரெயிலி (Mr. Disraile) ஐத் தவிர நாவல் (Novel) என்னும் கதையை உண்டுபண்ணுவதில் மகிமை பெற்ற இராஜ தந்திரருள் சரித்திரங்களும் ஜீவியசரித்திரங்களும் விசேஷமாய் எழுதிய லார்ட் ரஸ்ஸில் (Lord Russel) உம், நார் மெண்டி (Normendy) இன், மார்க்குவிஸ் (Marquis) உம், இராஜதந்திர சரித்திரத்தைத் தனக்கு விட்டாற்றியாகவும், கல்வி ஆராய்ச்சியை முக்யவேலையாகவும் வகித்துக்கொண்ட அநுபவசாலியான "நாவலிஸ்ட் (Novelist) கதாகிரந்தகர்த்தராகிய லார்ட் லிட்டன் (Lord Lytton) உம், சேர்ந்தவராயிருக்கின்றனர்.

முடிவு என்னெனின், போதுமானபடி வேலைசெய்தலானது மனதிற்கும், தேகத்திற்கும் நன்மையாக விருக்கிறது. மனிதனை வன் சரீரத்தின் கருவிகளாற் போற்றி இரட்சிக்கப்பட்ட ஓர் சிற்பொருளாயிருக்கிறான். அக்கருவிகளின் சுறுசுறுப்பான முயற்சியானது சுகபோகத்திற்கு இன்றியமையாமை யாகின்றது. அளவிற்கு மிஞ்சின வேலையைத்தவிர வரம்புபட்ட வேலையானது நீங்குள்ளதன்று. ஒரேவிதமானதும், இளைக்கச்செய்வதும், பயன்பெறும் நம்பிக்கையற்றதுமான வேலையைப்போற் கடினமான வேலையானது அவ்வளவு தீங்குவிளைக்கத்தக்கதன்று. பயன்பெறும் நம்பிக்கையுள்ள சகலவேலையும் சுகமுள்ளதாயிருக்கின்றது. பயனுடன் நம்பிக்கைகொண்டு ஒருவேலையில் முயற்சிப்பதானது சந்தோஷத்திற்கு மகத்தான இரகசிய சாதனங்களில் ஒன்றாக இருக்கின்றது. அபரிமிதமான மூளைவேலையானதுமற்றெத்தன்மையான வேலையினும்

அதிகஇளைப்புறுத்துவதன்று. தக்க ஒழுங்குடன் செலுத்தப்படின், சரீரமுயிற்சியைப் போலவே, சுகத்தைப் பெருக்குவதாயிருக்கின்றது. சரீரதத்வ விஷயமாகத் தக்க கவனம் செலுத்துமிடத்து, அவன் சகிக்கிற அளவிற்கு அதிகமான பாரத்தை ஒருமனிதன்பேரில் சுமத்துவது கஷ்டமாகத் தோற்றுகிறது. ஒருவன் சோம்பலாய்த் தன் இஷ்டப்படி தன் ஆயுண்முழுவதும், கேவலம், உண்டுகுடித்து உறங்குவதானது, மிகவும் அதிகமான கெடுதலை உண்டாக்குகிறது. துருப்பிடிப்பதால் உண்டாகிய சேதமானது வேலையால் உண்டாகிய சேதத்திலும், மிகவும் தீவிரப்பட்டதாயிருக்கிறது.

ஆனால் வரம்புகடந்த வேலையானது எப்பொழுதும் நன்மையான லாபமன்று. முக்யமாய் அது அலட்டுத்தொந்தரவுடன், சேர்ந்தால் உள்ளபடியே அது மிகவும் வியர்த்தமாக விருக்கிறது. மெய்யாகவே வேலையைச் செய்யிலும் அலட்டின் எரிச்சலானது அதிகக் கோபம் உண்டாக்குகின்றது. அது தேகத்தைத் தின்று உஷ்ணப்படுத்தி மிகுந்த ...... ய்தலைச் செய்கின்ற, மணலும், சரலும் யந்திரத்தின் சக்கரங்களைத் தேய்ப்பதுபோலச் சரீரத்தை நாசப்படுத்துகின்றது. அளவுக்கு மிஞ்சிய வேலையும், அலட்டின் எரிச்சலுமில்லாதபடி காத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், அளவுகடந்த மூளைவேலையானது கஷ்டமான வேலையாயிருக்கின்றது. அது பிரகிருதியில் அளவுகடப்பதற்கு ஏற்பப் பலத்தை அழித்துக் கெடுக்கின்றது. ஒரு சிலம்பவித்வானானவன் தன் சரீரத்தின் பலத்தைக் கடந்து வேலைகள் செய்ய எத்தனிப்பதால் அவனுடைய சதைப் பற்றுகளை நெருக்கி முதுகை முறித்துக் கொள்வதுபோல மூளை வேலைக்காரன், தன்மனதை அளவுகடக்க விடுதலாற் கெடுத்து நிறை தவறச் செய்யலாம்.

(நான்காம் அதிகாரம் முற்றிற்று.)

---

ஸ்ரீ:

# நுண்பொருண்மாலை.

———:o:———

[ஒரு பழைய நூல்.]

[நுண்பொருண்மாலை என்னும் இந்நூல், திருக்குறள்-பரிமேலழகரது உரைக்குரையாக, ஆழ்வார் திருநகரித் திருமேனி—இரத்தின கவிராயரால் எழுதப்பெற்றது. இவ்விரத்தின கவிராயர் என்பவர், இராசைவடமலையப்ப பிள்ளையன்மேற் புலவராற்றுப்படைபாடிய இரத்தினகவிராயரது வமிசத்தலைவரும், மாறனலங்காரத்துக்குப் பேருரை யிட்டவருமான பெரும் புலவர். இவர் இற்றைக்கு முந்நூறு வருஷங்கட்கு முன் விளங்கினவர் என்பர். இக்கவிராயரால், திருக்குறள்-பரிமேலழகருரைக்கு "டீகை" போன்ற குறிப்புரையொன்று "நுண்பொருண்மாலை" என்றபெயரிட்டு எழுதியுள்ளவிஷயம், ஆழ்வார் திருநகரியினின்று சங்கத்துக்குக் கிடைத்த ஏடொன்றால் அறியப்படுகிறது, இந்நூலை, அக்கவிராயர் தம்சொந்த உபயோகத்திற்கு ஞாபகக்கருவியாக எழுதினரென்று இதன்போக்கால் கருதப்படுகிறது. இந்நுண் பொருண்மாலையால் இரத்தினகவிராயருடைய இலக்கண சம்பந்தமும் பிறசம்பந்தமுமான பல கொள்கைகளும், பேராராய்ச்சியும் நன்குவெளிப்படும். சேதுசம்ஸ்தான வித்வான் ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்கள், "செந்தமிழ்" முதற்றொகுதியில், "பரிமேலழகருரை விளக்கம்" என்னுந் தலைப்பின்கீழ் எழுதிய விஷயங்களில், இந்நுண்பொருண்மாலையின் திருக்குறள் கடவுள்வாழ்த்ததிகாரத்துக்குள்ள உரைக்குறிப்புக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இப்போது, எல்லார்க்கும் பயன்படவேண்டி, அதனை அடியிலிருந்தே தொடங்கி முடிக்கக் கருதியுள்ளேன். இம்முயற்சியில், அறிந்துமறியாதும் நேரும் குற்றங்குறைகளை அறிஞர் பொறுத்தருள்வாராக—பத்திராசிரியர்.]

க. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

பரி......உரை. எழுத்துக்கெல்லாம்......கூறப்பட்டது.

நுண்பொருண்மாலை—அவைபோல வென்றது ஒருமையாய் அதுபோல வென்றது காண்க. வாளாது எடுத்துக்காட்டுவமையென்

ளது தலைமைபற்றி வந்தது என்றதனானும், 'முதற்றே யுலகு என உலகின்மேல் வைத்துக் கூறினாரேனும் உலகிற்கு முதல் ஆதிபகவ னென்பது கருத்தாகக்கொள்க' என்பதனானும், எழுத்திற்கெல் லாம் முதலகரம்; அதுபோல, உலகிற்கு முதல் ஆதிபகவனென்க. ஆதிபகவன் என்பது பகர வொற்று மிகாமையால் வடநூன்முடி பென்றாரென்க. தமிழ் முடிபாயின் 'அறைபறைகண்ணார்க்கு' (திருக் குறள் - ௧௧௭௦) உரைத்தாங்குரைப்பர் *. எடுத்துக் காட்டுவமையா வது உவமவுருபு பெறாது அதுபோல எனப் பெய்துரைப்பக்கிடப் பது. இதனை இசையெச்சம் என்றெழுதினார் சேனாவரையர் எச்ச வியலில். (சூ-ம்-௩௪.) அது 'காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்' என்னுங் கோவையா நுரையிற் காண்க. † காணப் பட்டவுலகு உயிர்மேனின்றாற் காணப்படுத லெவ்வாறெனின்;— முன்னர் 'உலகம் வழங்கி வருதலால்' (திருக்குறள் - ௧௧)என்பதற்கு உயிர் உடம்பொடு காணப்பட்டு வருதலாலென்னு முரையானும் 'உயி ரீரும் வாளது' (திருக்குறள் - ௩௩௪) என்பதனானுங் காணப்படும்.

உ. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

பரி-உரை. எல்லா........................கூறப்பட்டது.

நண்-மாலை. கற்றது 'உடுப்பதூஉமுண்பதூஉமின்றிக்கெடும்' (திருக்குறள்-௧௬௬.) என்பதுபோலச் செயப்படுபொருளாய்க் கல்வி யாயிற்று. 'காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்பான் - மாலைக்குச் செய்த பகை' (திருக்குறள்-௩௨௫.) என்புழி, எவன் கொல் என்பதனானும் எவன் என்றாந் திரிந்ததறிக. மூன்றாவதும், எனின்என் னெச்சமும் ஆய என்பதனோடு முடிந்தன.' என்கடைக்

* தமிழ்முடிபாயிற் செய்யுள் விகாரமாகக்கூறுவர் என்பது கருத்து. அறைபறை கண்ணார் என்பதனை அறைபறையாகிய கண்ணினையுடையார் எனக்கொண்டு செய்யுள் விகாரமாக்கினார்.

† கலந்தாரிருவர் என்பது பாடமாயிற் "காகத்திருகண்ணிற்கொன்றே மணி" என்பதனை எடுத்துக்காட்டாக உரைக்க' என்றார் பேராசிரியர். திருக் கோவை-௭௧.

கண்ணினும்' என்னுங் கோவையாரும் (உகூகூ) அது.* 'அவற்றுட், பிரிநிலை' (தொல்-சொல் ௩ரு.) என்னுஞ் சூத்திரத்து நச்சினார்க்கினியர் 'சோற்றைப் பசித்துண்டான்' எனக்காட்டியதும் அது.

௩. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

பரி...உரை. மலரின்கண்ணே.........நினைத்தல்.

நுண்...மாலை. 'ஏற்றுவாருமுளர்' என இவ்வாறு பிறர்கருத்துரைப்பனவெல்லாம் வடநூலார் பக்ஷாந்தரம் என்பர். அவனடி உடம்பாற் சேரப்படாமையிற் சேர்தல் நினைத்தலாயிற்று. இதனை வடநூலார் உசிதமென்பர். 'பொன்போற் பொதிந்து'† (திருக்குறள்-கருரு) என்பதும் இவ்வாறு போந்த பொருள்படுமென்க. 'வாராக் காலத்தும்' என்னுஞ் சூத்திரம் 'ஏகினான்' என்பதற் கமைத்தார். 'இறுமாப்பொழிந்தவிணைமுலை' என்னுங் கோவையாரும் (௩எ௩) அது.‡ மாணடி - வினைத்தொகை.

ச. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

பரி...உரை. ஒருபொருளை......இலவாயின.

நுண்......மாலை. யாண்டும் என்பது காலப் பொருட்டாயிற்று. ஒற்றினுள் 'யாண்டுமுகா அமை' (ருஅரு) என்பது சதுருபாயப்பொருட்டு. இனி, இடப்பொருட்டுப் பெரும்பான்மையும் வரும். இல என்பது உண்டு என்பதற்கு மறையாய்ப் பொருண்மை சுட்டி இல்லென்னும் பொருட்டாய்ப் 'பிறன்கடை நின்றாருட் பேதையாரில்' (கசஉ) என்றதுபோல நின்றது. 'கோளில்பொறி

---

* கடைக்கண்ணினும் என்னும் வேற்றுமைச் சொல்லும், எத்தாவகை என்னும் வினை யெச்சமும் கடைக்கண்வைத்த என்னும் வினைகொண்டன" என்றார் பேராசிரியர்.

† பொதிந்துவைத்தல்—சால்புடைமைபற்றி இடைவிடாது நினைத்தல் என்பர்.

‡ இணைமுலைகள் எந்துதலையொழியப் புகாநின்றன. ஒழிந்த என்னும் இறந்தகாலம் விரைவுபற்றி வந்தது என்றார் பேராசிரியர்.

யிற் குணமில' (௯) என்பது உடைமை என்பதற்கு மறையாய்த் தலைகள் குணத்தையில என வினைக்குறிப்பாய்நின்றது. 'இன்றில' (தொல்-வினை-௨௩) என்னுஞ் சூத்திரத்துள் இளம்பூரணர், கல்லாடர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலாயினோர் உரைத்தவுரையினுங் காண்க. முன்னர் உள, உளது, உண்டு, இலது, உடைத்து, அன்று, இன்று என வருவனவெல்லாம் இவ்வாறுவரும்; ஆண்டாண்டுக்காண்க. இடும்பை மூவகைத்து; இவற்றை வடநூலார் தாபத்திரயம் என்பர்.

௫. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

பரி...உரை. மயக்கத்தை..............சொல்லுதல்.

நுண்...மாலை. நல்வினையும் பிறத்தற் கேதுவாகலிற் கூட்டினார். 'சார்புணர்ந்து....... நோய்' (௩௫௯) என்பதும் அது.*

௬. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

பரி...உரை. மெய்..............பட்டது

நுண்...மாலை. ஒழுக்கநெறி பாரிபாட்டு என்றாற் போலாது கபிலரது பாட்டு என்றாற்போலுஞ் செய்யுட்கிழமை. 'பற்றுக பற்றற்றான் பற்றினை †' யுமது. 'தெரிந்துமொழிச்செய்தியின்' ‡ என்னும் ஆறுவதன்சூத்திரவிதி பெற்று இடத்தினிகழ்பொருளென்னும் பிறிதின் கிழமையாயிற்று.

௭. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

---

* 'பிறப்பிற்குக் காரணமாகலான் நல்வினைப்பயனும் நோயெனப்பட்டது' என்றார் பரிமேலழகர்.

† 'பற்றற்றான் பற்றினை' என்பதற்கு 'எல்லாப் பொருளையும் பற்றி நின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டுநெறியை' எனவுரைத்து 'பற்றற்றான் பற்று' என்புழி ஆறுவது செய்யுட்கிழமைக்கண் வந்தது' என்றார் பரிமேலழகர்.

‡ தொல், சொல், வேற்றுமை—௧௧.

பரி...உரை. ஒருவாற்றானும் . .........என்பதாம்.

நுண்...மாலை. அரிது இன்மைமேனின்றது. 'அருங்கேட' னுமது. (உகo.) அல்லால் என்பது வினையெச்சக்குறிப்பு.

அ. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

பரி...உரை. அறக்கடலாகிய............வுருவகம்.

நுண்...மாலை. ஏகதேசவுருவகமாவது 'காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு, நாணுத்தாழ் வீழ்த்த கதவு' (கஉருக) என்பது போல் முற்றுருவகமாய் வாராது ஒருவழி உவமைகுறைந்து பொருள்நிற்பதும், ஒருவழிப் பொருள்குறைந்து உவமைநிற்பதும், ஒருமருங்குவமையும் பொருளுங் குறைந்துநிற்பதும், ஒருவழிக்குறைந்ததற்கேற்ற வினைபெற்று நிற்பதும் என்க. 'அறவாழியந்தணன்றாள் சேர்ந்தார் ' * (அ) 'பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கும' † (எருரு) 'சினமென்னுஞ் சேர்ந்தாரைக்கொல்லி யினமென்னு- மேமப் புணையைச் சுடும்' ‡ (ருoசு) 'காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி-மாலை மலருமிந் நோய்' § (கஉஉஎ) எனவரும் ஏகதேசவுருவகங்களெல்லாம் முறையே காண்க.

கூ. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

பரி...உரை. தத்த.....................பட்டது.

---

* தாளெனப் பொருள்நின்று புணையென்னும் உவமைகுறைந்தது.

† பகையாகிய இருளைக்கெடுக்கும் என்பதனாற் பகையென்னும் பொருள் குறைந்து இருள் என்னும் உவமை நின்றவாறு காண்க.

‡ 'இனமென்னுமேமப்புணை என்ற ஏகதேசத்தாற் பிறவிக்கடலு ளழுந்தாமல் வீடென்னுங் கரையேற்றுகின்ற என வருவித்துரைக்க'; என்பதனாற், பிறவி, வீடு என்னும் பொருள்களும், கடல், கரை என்னும் உவமைகளுங் குறைந்துநின்றவாறு உணர்க.

§ நோயாகிய பூ என்னும் உவமைகுறைந்தும் அதற்கேற்ற அரும்பதல் போதாதல் தொழில் பெற்றும் நின்றவாறு காண்க.

நுண்...மாலை. வணங்காத்தலை, காணுக்கண் 'கேளாச்செவி போலுமென்க.

௧௦. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

பரி...உரை. இறைவனடி...............பட்டன.

நுண்...மாலை. சேர்ந்தார் என்பது சொல்லெச்சமென்றார். அச்சொல் எஞ்சிநிற்றலின் 'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்' (௨௯) 'தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்' (௨௦௧) 'என வினைமுதற்கண்ணும்' 'ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்'(௧௫௫) எனச் செயப்படுபொருட்கண்ணும் வருவனபோலப் பொருள்பெற்றுச் சொற்பெருமையினென்க. *'உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்-கடையரே கல்லா தவர் †' (௩௯௫) என்பதும் அது. அடிப்புணை யென்னுமையா லேகதேசவுருவகம்.

(தொடரும்)

---

# தஞ்சைவாணன்கோவை.

(தொடர்ச்சி.)

———:o:———

௨௦௫-ம் பக்கம் ௨-ம் வரி "இறைச்சியிற் பொருளாவது" எ-து இறைச்சியிற்பிறக்கும் பொருளாவது என்றிருக்கின்றது. "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே" என்பது சூத்திரமாதலின் இதுவே பொருத்தமுடைத்து.

௨௯௪-ம் கவி கிளவியுரை. "தெய்வத்தின் பிரியேனென்றுணைகூறி எ-து,தெய்வத்தின்முன் பிரியே னென்றுணைகூறி எனக்காணப்படுகிறது. முன்னது பொருட்பொருத்தமின்மையின் இதுவே பொருத்தமுடைத்து.

---

* இதனுள் "தலையாயினர்" என்பது சொல்லெச்சம்.

†. ௨௯, ௨௦௧, ௧௫௫-இவை பொருளுஞ் சொல்லும் பெற்றன, இவை போலாமையின் என்பது கருத்து.

*

௯௭ கவி விசேடவுரை. "குத்துதல் - இரிதல்" எ-து, இகத்தல் - பிரிதல் என்றிருக்கின்றது. முன்னது செய்யுளிலில்லாமையாலிது வேபொருத்தமுடைத்து.

உகூ0 - ம் கவி விசேடவுரை. "வாறு - முறைமை" எ - து விட்டுப்போயிற்று.

உகூஅ - ம் கவி. "அறியாமையினென்று கேட்கலுற்றேனும் மை" எ-து, அறியாமையானென்று கேட்கலுற்றேமும்மை - யென்று காணப்படுகிறது. அறியாமையினாலொன்று கேட்கலுற்றேம் எ - து, உரையாதலினிதுவே பொருத்தமுடைத்து.

௩0௪ - ம் கவியுரை. "நின்மகளும் நதிக்குத்தோற்றுப்போன" எ - து, நின்மகளுந்திக்குத் தோற்றுப்போன வெனக்காணப்படுகின்றது. "உந்திப் பொற்பினுக்கோர், சுழிதோற்றிடும்." என்பது செய்யுளாதலினிதுவே பொருத்த முடைத்து.

௩0எ - ம் கவி விசேடவுரை. "மருளே, என்புழி ஏகாரம் ஈற்றசை" எ - து, அருளே என்புழி ஏகாரம் ஈற்றசை எனக்காணப்படுகின்றது. "அருளே மொழிய" எ-து, செய்யுளாதலினிதுவே பொருத்தமுடைத்து.

௩0அ - ம் கவி விசேடவுரை. "அனிச்சங்கொலோ என்புழிஓகாரமும்ஐயம்" எ - து, அனிச்சங்கொலோ என்புழிக் கொல்லும் ஐயம் எனக்காணப்படுகின்றது. கொலோ என்புழி ஓகாரம் அசைநிலை யெனப் பின்கூறுதலாலிதுவே பொருத்தமுடைத்து.

௩௧0 - ம் கவி. விசேடவுரை. "என்னுங்குத்திரத்தானுணர்க" எ - து. என்னுஞ் சூத்திரவிதியானுணர்க. எனக்காணப்படுகின்றது. இதுவேஇயைபுடைத்து.

௩௧௧-ம் கவி. "மெய்நாணுயிரினு மிக்கதன்றால்" எ-து "மெய்நாணுயிரினு மிக்கதென்றால் என்றிருக்கிறது. நாண் உயிரினுஞ்சிறந்ததென்று சொல்லின் என்பது உரையாதலினிதுவே யியைபுடைத்து.

௩௧அ - ம் கவி விசேடவுரை. "போற்றல்-ஈண்டுவருடல். வருடி - வருத்தந்தீர்த்து. ஆல் - அசை." என்பது விட்டுப்போயிற்று.

௩௨௧ - ம் கவியுரை. "கமுகும் புரிசையுஞ் சூழ்ந்து" எ - து. அகழும் புரிசையுஞ்சூழ்ந்து என்றிருக்கிறது. "கிடங்கும்புரிசையுஞ் சூழ்ந்து" என்பது செய்யுளாதலினிதுவேயியையுடைத்து.

௩௨௪ - ம் கவியுரை. "அழகிய கற்பினால் சுரத்தழல் அன்னை பொறுத்தாள்" எ - து; அழகிய கற்பினால் சுரத்தழல் தன்னைப் பொறுத்தாள் எனக்காணப்படுகின்றது. "காமர்கற்பாற் - பொறுத்தாளழற் சுரந்தன்னை" எ - து. செய்யுளாதலினிதுவே யியையுடைத்து.

௨௨௧ - ம் பக்கம் ௫-ம் வரி. "தன்னைத்தெளிந்து கூறல்" எ - து தன்னை நொந்துகூறல் என்றிருக்கிறது. இதுவே கிளவிக்கியையுடைத்து.

௩௩௭ - ம் கவி விசேடவுரை. "எய்திலரே என்பது முன்னிலையெச்சம்" என்பது, விட்டுப்போயிற்று.

௩௩௩ - ம் கவி "செயலைத்தருவின் வருநிழலே" எ - து, செயலைத்தருவின்றிரு நிழலே எனக்காணப்படுகின்றது. இதுவே உரைக்கியையுடைத்து.

ஷை கவி விசேடவுரை. "பெருஞ்சிற்றில் - அவரவர் விளையாடுஞ்சிற்றில் அறம் பெரிதாய் வளர்ந்தசிற்றில்" எ - து. பெருஞ்சிற்றில் - அவரவர் விளையாடுஞ்சிற்றிலினும் பெரிதாய் வளர்த்தசிற்றில் என்றிருக்கின்றது. முன்னது அவாய்நிலையின்மையின் இதுவேயியையுடைத்து.

௨௫ - ம் பக்கம் ௨ - ம் வரி. (கிமிந்தம் போற்றல்) என்பது சகுனப்புள்ளைத்துதித்தல் எ - து விட்டுப்போயிற்று.

௩௩௬ - ம் கவி. "தாமேதமக்கொப்பு" என்னுங் கவிக்குப்பிரதியாக,

அரக்காம்ப றுைம்வா யம்மருங்குற் கன்னே
பரற்கான மாற்றின கொல்லோ—வரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனவென்
றஞ்சிப்பின் வாங்கு மடி, என்பது காணப்படுகிறது.

௩௩௯-ம் கவி. "ஆயமுந்தாயமு மழுங்கக்கண்டோர் காதலி னிரங்கல் என்பது வெளிப்படை. கண்டோர் - மாதரார் எனவுணர்க. அழுங்கல் - இரங்கல்" என்பது விட்டுப்போயிற்று.

௩௪௫-ம் கவியுரை. "சிலையுடனே எமபுரப்பக்கத்தில் வீழத் துரத்திய" எ - து, சிலையுடனே அம்பு பக்கத்தில் வீழத்துரத்திய என்றிருக்கின்றது. "சிலைவண்டுபாடுக அடுகரிை" எ - து செய்யு ளாதலி னிதுவே பொருத்தமுடைத்து.

௬ கவி விசேடவுரை. "இசைக்குருகப்படுசிலை - இராவணன் பிணிக்கக் குறுமுனிபாடுமிசைக்கு உருகப்பட்டபொதியமலை,எ - து. இராவணனைப் பிணிக்கக்குறுமுனிபாடுமிசைக் குருகப்பட்டபொதிய மலை, என்றிருக்கிறது. முன்னது பொருட்பொருத்த மின்மையில் இதுவே இயைபுடைத்து.*

இதில், "வண்டு - அம்பு" என்பது விட்டுப்போயிற்று.

௩௪௯ - கவியுரை. "வாணனது தஞ்சையின்" எ - து. வாண னது தஞ்சாக்கூர் என்றிருக்கின்றது. இங்ஙனம் இருத்தல் ௨௫௨-ம் கவியில் யாங்கூறியதற்கியை புடைத்தாதல் காண்க.

௩௪௮-ம் கவி. விசேடவுரை. இவ்வொன்பதுஞ் செவிலிபின் றேடிச் சேறற்குரியவாமாறுணர்க" என்பது, விட்டுப்போயிற்று.

* "இராவணனைப் பிடிக்கக் குறுமுனிபாடும் இசைக்கு உருகப்பட்ட பொதியமலை" என்பதன் வரலாறு நன்கு விளங்கவில்லை. இவ்விஷயம், சோணசைலமாலை, ௨௫-ம் கவியில், "இனியபைந் தமிழின் பொதிய மால் வரைபோ லிசைக்குரு காதிம மலையின், றனையையின் றீஞ்சொற் குருகுழுஞ் சோண சைலனே கைலைநாயகனே" என்று சிவப்பிரகாச முனி வராலும் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியப் பாயிரவுரையிலே, அகத்தி யர் வரலாறுரைக்கின்றவிடத்து, "பொதியின்கணிருந்து இராவணனைக் கந் தருவத்தாற் பிணித்து ஆண்டுவாராமை விலக்கி", எனவும்; மதுரைக் காஞ்சியில் "தென்னவற் பெயரிய.........தொன்முது கடவுள்" என்பத ற்கு,"இராவணனைத்தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கின பழமை முதிர்ந்த அகத்தியன்...இராவணன் தென்றிசையாண்டமைபற்றித் தென்னவன் என் றார்" எனவும் நச்சினார்க்கினியர் எழுதிச் செல்லுதலால், அகத்திய முனிவர் தென்றிசையையாண்டு வந்த இராவணனைப் பிணித்தல்வேண்டிக் கந்தருவ கானத்தைப் பாடியபோது, அவ்விசைக்குப் பொதியமலை உருகிற்றென் பது, ஒருவாறு ஊகிக்கப்படுகிறது.

௩௫௮ - ம் கவிக்கிளவி. "தலைவன் பாங்கிக்கியான் வரைந்தமை தமர்க்கு இயம்புகென்றென்றல்" எ - து, தலைவன் பாங்கிக்குயான் வரைந்தமை தமர்க்கு இயம்புசென்றென்றல், என்றிருக்கிறது "தலைவன் பாங்கிக்-கியான் வரந்தமை தமர்க் கியம்புசென் றென்றல்" எ - து, அகப்பொருட் சூத்திரமாதலினிதுவே இயைபுடைத்து.

௩௬௨ - ம் கவி. விசேடவுரை. "வென்றிவேல் வலங்கையி னும், அருள்நெஞ்சினுமென்றது உற்றூர் வணங்காக்கால் வேல்செலு த்தலும்" எ - து, வென்றி வேல்வலங்கையினும், அருள் நெஞ்சினு மென்றது, மாற்றூர் வணங்காக்கால் வேல்செலுத்தலும், எனக்கா ணப்படுகிறது. இதுவே பொருட்கியைபுடைத்து.

௩௬௪ - ம் கவி. "நூறலையஞ்சலை துண்ணிடையாய்" எ - து, நூறலை யஞ்சலெனுண்ணிடையாய் எனக் காணப்படுகின்றது. இதுவே உரைக்கியைபுடைத்து.

௸ உரை. "ஆதலான் இவரால்" எ - து, ஆதலான் நீவாரலை, எனக் காணப்படுகின்றது. இதுவே செய்யுட்கியைபுடைத்து.

௩௬௫ - ம் கவிக்கிளவி. "தமருடன் செல்பவள் அவன் புற நோக்கிக் கவன்றாற்றல்" எ - து, தமருடன் செல்பவள் அவன் புற நோக்கிக் கவன்றுற்றல், எனக் காணப்படுகின்றது. இதுவே அகப் பொருட் சூத்திரத்துக் கியைபுடைத்து.

௸ கவி. "ஏமானென வஞ்சமேற் காத்தலி" எ - து, ஏமா னென வஞ்சமெற் காத்தலி, என்றிருக்கிறது. இதுவே உரைக்கி யைபுடைத்து.

௸ கவி விசேடவுரை. "அலரறிவுறுத்தற்குரித்து" எ - து, வரவறி வுறுத்தற் குரித்து, எனக்காணப்படுகின்றது. முன்னது அகப்பொருட் சூத்திரத்திற்கு மாறுபடுதலின் இதுவே பொருத்த முடைத்து.

௩௭௬ - ம் கவிக்கிளவியுரை. பின்வருமாறு காணப்படுகின்றது. "வரைதல் எ - து, ஐம்பத்தாறுநாள் தலைவன் மீண்டு தலைவியில்லின் வாராநின்றுழி தலைவி தமரெதிர்கொண்டு போயழைத்து வந்தபின் உலகவியற்கையின்படி பலவிதயாக அருங்கல முதலிய வேண்டுவன

கொடுத்து அந்தணரையுஞ் சான்றோரையு முன்னரிட்டு மணச் சடங்குடனே வதுவை முடித்துக் கோடல்.

சென்றோன் மீண்டுவந்து அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டு வரைந்துகொண்டுழிக்கண்டோர் மகிழ்ந்துகூறல் எ - து, "தன்னூர் வரைதலும் தன்மனை வரைதலும், என்னுமிவ் விரண்டொழித் தெவற்றினுங் கிழவோ, னந்தணர் சான்றோர் முன்னிட் டருங்கலந், தந்து வரைத றுருதி யென்ப"என்னுஞ் சூத்திரவிதியால் சென்றோன் மீண்டுவந்து, அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டு வரைந்து கொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல். இதுவே பொருட்கிளை புடைத்தாமாறு காண்க.

௨௪௨-ம் பக்கம் ௯௯-ம் வரி. "மணஞ்செய்யுங்கால் இத்தன்மையாளை நினக்குமணஞ் செய்ய நினைந்தேம்,, எ - து, ,,மணஞ்செய்யுங்கால் இத்தன்மையாவாளை நினக்கு மணஞ்செய்ய நினைத்தேம் என்றிருக்கிறது. தலைவியைவினுதல் பிற்கூறலின் இங்ஙனமிருத் தலேயிலைபுடைத்து.

௨௪௯ - ம் பக்கம் ௪-ம் வரி. "தலைவியைத்தாயருமிவ்வா றுவினவிக் குறிப்பானுணர்ந்து செய்வரெனக்கொள்க" என்பதுவிட்டுப்போயிற்று.

௯௭௦ - ம் கவி உரை. "கருநிறம் பொருந்திய நீலமலரையுடைய" என்பதும், "நிறத்தையொப்பனவாய" என்பதும், முறையேகருநிறம்பொருந்தியலர்ந்த நீலமலரையுடையவெனவும், நிறத்தையொழுக்குவனவாய் எனவும் காணப்படுகின்றன. இங்ஙனமிருத்தலே செய்யுட்கிளைபுடைத்தாமாறுகாண்க.

௯௭௨ - ம் கவி கிளவியுரை. "கலியாணமனையில் வந்தசெவிலிக்கு இருவரது, அன்பும்உவப்பும் உணர்த்தல்" எ - து, கலியாணமனையில் வந்தசெவிலிக்கு இருவரை இருவரது அன்பும் உறவும் உணர்த்தல் என்றிருக்கிறது. இதுவேகிளவிக்கிளைபுடைத்து

௯௯௧ கவியுரை. "தன்னிளங்கொங்கையைக் கொண்டு முதிரக்கொண்ட" என்பது, தன்னிளங்கொங்கையைக் கொண்டுமுதிரங்

கொண்ட என்றிருக்கிறது. பின்னையதே பொருட்பொருத்த முடைத்தாதல்காண்க.

கூசச-ம் கவி. "நன்மையுடனெதிர்ந்தார்" எ-து, நன்மையுடன்றெதிர்ந்தார் என்றிருக்கிறது; இதுவே யுரைக்கியைபுடைத்து.

உசஅ-ம் பக்கம். பரத்தையிற் பிரிவு என்பதன் கீழுள்ள வசனத்தில், அன்றன்று என்பது, அற்றன்று எனவும், அரசுரிமைக்கு என்பது, அவ்வரசுரிமைக்கு எனவும், விரித்திருக்கப்படுதலானும் என்பது, வரித்திருக்கப்படுதலானும் எனவும், காவற்றொழில் செய்தலுமென்பது, காவற்றொழில் செலுத்தலு மெனவும், கல்விபயிற்றலும் என்பது, கல்விபயிறலும் எனவும், ஆடல்பாடல் ஒன்றுதலானும் என்பது, ஆடல் பாடற்காலம் ஒன்றுதலானும் எனவும், அவருடன் புணர்தற்குரியரை என்பது, அவருட் புணர்தற் குரியரை எனவும், காணப்படுகின்றன. இவ்வாறிருத்தலே பொருட்கியைபுடைத்தாமாறுகாண்க.

கூஅ0-ம் கவிகிளவியுரை. "வடநூலார் புறகுரைப்பா மென்று கூறுவராதலால்" என்பது, வடநூலார் புறத்தைப் பரமென்று கூறுவராதலால் என்றிருக்கிறது. முன்னது பொருட்பொருத்தமின்மையின் இதுவே பொருத்தமுடைத்து.

கூஅச-ம் கவி கிளவி. "தலைவன் வரவுகண்டு வாயிலக்கணமொழிதல்" என்பது, தலைவன் வரவுகண்டுவந்து வாயில்கண்மொழிதல் என்றிருக்கிறது. அகப்பொருட்சூத்திரமுமிதுவாதலின் இங்ஙனமிருத்தலே பொருத்தமுடைத்து.

கூகூஉ-ம் கவி உரை. "முயங்கியதுதான்" என்பது, முயங்கிலதுதான் என்றிருக்கிறது. இதுவே பொருட்பொருத்தமுடைத்து.

ச00-ம் கவி. "ஏயேயென நிற்றலான றிந்தேனன்னே" என்பது, ஏயேயெனநிற்றலான றிந்தேன்றன்னை என்றிருக்கிறது. இதுவேயுரைக்கியைபுடைத்து.

ஷை கவி விசேடவுரை. "மகிழ்க என்பது முன்னிலையெச்சம் என்புது, மகிழ்வென்பது முன்னிலையெச்சம் என்றிருக்கிறது. இச்

செய்யுள் தலைவிகூற்றுதலான் இவ்வாறிருத்தலே பொருத்தமுடைத்து.

சOஎ-ம் கவியுரை. "வனத்தன்மையளென்று கருதாது" என்பது, அவனத்தன்மையனென்று கருதாது என்றிருக்கிறது. இதுவே செய்யுட்கியைபுடைத்து.

சக௬-ம்கவி. "சுற்றுங்குழலின்பிணி" என்பது, சுற்றுங்குழனின்பிணி என்றிருக்கிறது. இதுவே, புரைக்கியைபுடைத்து.

௬ஷ கவியுரை. "தூதாகவந்து சென்றவர்" என்பதும், விசேடவுரையில் நாள் என்புழி ஐந்தனுருபுதொக்கது என்பதும், முறையே, தூதாகவன்று சென்றவர் எனவும், நாள் என்புழி ஏழனுருபுதொக்கது எனவும், காணப்படுகின்றன. இவ்வாறிருத்தலே பொருட்பொருத்தமுடைத்தாதல் காண்க. (முற்றும்.)

சுந்தரேசுவர ஐயர்.

---

# புத்தகக் குறிப்பு.

பகவத் கீதை :—உலகம் புகழும் ஞானசாஸ்திரமாகிய இந்நூல் விசிஷ்டாத்வைதபரமாகவும் அத்வைத பரமாகவும் செய்யுள்நடையிலும் வசனநடையிலும் முன்னோரும்பின்னோருமான பல்லோரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய நூல் எவ்வளவு வகையாக மொழிபெயர்க்கப்பெறினும் வேண்டப்படுவதேயாம். இப்போது, மசூலிபட்டணம் ஹிந்து ஐஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீ திருநயம் - ஸா-முத்துஐயரவர்களால் வெண்பா விகற்பங்களில் இது மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கிறது. இம்மொழிபெயர்ப்பை யாம் ஆராய்ச்சி செய்தவரையில், ஆசிரியர் வடமொழி மூலத்தினயத்தைத் தம்மாற் கூடியவாற்றால் விளங்கவைக்கப் பிரயாசையெடுத்திருக்கிறார் என்பது நன்குவிளங்குகிறது. செய்யுள்களும் பழகிமுதிர்ந்த வாக்காகவே காணப்படுகின்றன. ஒவ்வொரு வெண்பாக்களின்றலைப்பிலும் அதன் விஷயத்தைத் தடித்த எழுத்தில் அமைத்திருக்கிறார்கள். சுருங்கவுரைக்குமிடத்து, நூலின் பெருமைக்கேற்றவாறே வாக்கும்போக்கும் அமைந்து விளங்குகின்றன என்னலாம். ஆங்கில பாஷையில் வல்லவர்களென்று தெரியும் ஐயரவர்கள் தமிழபிமானமும் தமிழ்ப்பயிற்சியும் பெரிதும் பெற்று, தமிழகத்துக்கு ஓராற்றானுதவமுன் வந்திருத்தல்போலவே, ஏனையரும் தம்மாலியன்ற கைங்கரியங்களைப் புரிதல், தமிழ்த்தெய்வத்தின் ஒளி நலம் பெருகுதற்கு முக்கிய காரணமாகுமென்றே நம்புகிறோம். இப்புத்தகம் நல்ல காகிதத்தில் சிறப்பாக அச்சிடப்பட்டு உயர்ந்த கட்டடத்தில் அமைக்கப்பட்டுளது. இதன் விலை ரூ. 1—0—0. விலாசம்:—ஸ்ரீமத். எஸ். முத்துஐயரவர்கள், B. A., ஹிந்துஹைஸ்கூல், மசூலிப்பட்டணம்.

பத்திராசிரியர்.